Australia: $2.50 Canada: $ 2.00 Europe € 1.20 India: Rs.15.00 Norway: Kr.15.00 Sri Lanka: Rs.50.00 Switzerland: Fr.1.50 United Kingdom: £1.20

கலாஷேத்ரா:
சோலையில்
புயல்

JUNE 2012


NAZHIKAI
London

# நாழிகை

International Tamil Newsmagazine



## எலிஸபெத் மகாராணி வைரவிழா:
## 'பொலிவின் நினைவுகள்'


Western Jewellers
230 Upper Tooting Road
London SW17 7EW
Telephone : 020 8767 3445
SILK
EMBORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel : 020 8672 1900
Western Jewellers & Textiles
5 Plaza Parade 29-33 Ealing Road Wembley Middlesex HA0 4YA
Tel : 020 8903 0909

07 | இலங்கை
வட்டுக்கோட்டையிலிருந்து மட்டக்களப்புக்கு

20 | உலக விவகாரம்
சிரியா
தணிய மறுக்கும் வெறுப்பு அணைய மறுக்கும் நெருப்பு

32 | சிறுகதை
தரையில் கிடந்தவர்

36 | விளையாட்டு
இந்திய கிரிக்கெட்டின் எதிர்கூவல்

40 | விருந்தினர் பக்கம்
மதுரைக்கு மட்டுமா வந்த சோதனை?




10 | அட்டை செய்தி
மகாராணி பொன்விழா
பொலிவின் நினைவுகள்



44 | சினிமா



26 | கலை
கலாக்ஷேத்ரா
நல்லதோர் வீணைசெய்தே...




**Nazhikai** International Tamil Newsmagazine ISSN 1357-6933 Vol: VII, No: 2
**Editor:** S Mahalingasivam **Published by:** Pannews Talbot House 204-226 Imperial Drive Harrow Middx HA2 7HH
**Tel: 00 44 208 429 5223 / 208 422 5699 Fax: 00 44 208 728 2334 Email: pannews@hotmail.co.uk**
**Editorial:** editor@nazhikai.com / letters@nazhikai.com
www.nazhikai.com

**Anual Subscription** (12 issues)**: UK** £22.00 **Europe** £30.00 **Canada** $30.00 **India** Rs200.00 **All Other Countries** £35.00
Payable to **Pannews**
**Canada:** 880 Ellesmere Road, Suite 204, Toronto, ON. M1P 2W6 **Tel: 416 613 2770**

# வெல்பவர் யார்?

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டாவது தடவையாக இங்கிலாந்தில் தான் பங்குபற்றவிருந்த நிகழ்ச்சி இரத்துச்செய்யப்பட்ட நிலையில் திரும்பினார்.

முதலில், 2010 டிசம்பரில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக ஒன்றியத்தில் அவர் ஆற்றவிருந்த உரை இரத்துச்செய்யப்பட்டது. பின்னர் இப்போது, மகாராணியின் வைரவிழா நிகழ்வுகளுடன் தொடர்புடையதாக, பொதுநல நாடுகள் அமைப்பின் பொருளாதார அரங்கில் அவர் ஆற்றவிருந்தவிருந்த உரை இரத்துச்செய்யப்பட்டது.

இவையிரண்டும் இலங்கையில் விடுதலைப் புலிகளுடனான இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் அவருக்கு எதிராக தமிழர்கள் மேற்கொண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையடுத்து, பாதுகாப்புக் காரணங்களுக்காக ஏற்பாட்டாளர்களால் இரத்துச்செய்யப்பட்டன. இந்தவிதத்தில், ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் அல்லது தமிழர்கள் பலர் இதனை ஒரு வெற்றியாக கருதமுடியும்.

எனினும், உண்மையிலேயே இது அவர்களுடைய வெற்றிதானா?

விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள், கொள்கைகளில் இது ஒன்றும் புதிரான கேள்வி அல்ல. இலங்கையில் தமிழர்களுடைய பிரச்னையை முடிந்தவரையிலும் விடுதலைப் புலிகளுடன் தொடர்புபடுத்துவது அதன் யுக்தியாக வெளிப்படுகிறது. தமிழ் மக்களின் கோரிக்கைகளை விடுதலைப் புலிகளின் கோரிக்கை என்றும், தமிழர்களின் நடவடிக்கைகளை விடுதலைப் புலிப் பயங்கரவாதிகளின் நடவடிக்கையென்றும் முலாம் பூசிவிடுவதில் அரசு முனைப்பாகவிருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பாக அடையாளப்படுத்த முடிந்ததில், இந்தியா உள்பட உலக நாடுகள் பலவற்றை தனக்கு சாதகமாக்கி, விடுதலைப் புலிகளை ஒழித்துவிட்டபின்னர், தமிழர் விவகாரம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் வகுத்த நிகழ்ச்சி நிரலில் அது செயல்பட, விடுதலைப் புலிகள் முற்றாக ஒழிக்கப்பட்டுவிடவில்லை என்ற ஜாலம் அதற்கு அவசியமாகிறது. அப்படி, ஜாலத்தை எண்ணிய அரசுக்கு காட்சிகள் கிட்டின், வெற்றி யாருக்கு? ■

# உலகம்



பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரோன், ஓங் சன் சூ க்யி

## இங்கிலாந்து

### வரலாற்றில் பர்மிய ஜனநாயக தலைவி

பர்மிய எதிர்க்கட்சி தலைவி ஓங் சன் சூ க்யி இங்கிலாந்துக்கு விஜயம்செய்தபோது கரிபால்லி, மகாத்மா காந்தி, நெல்சன் மன்டேலா ஆகியோர் மட்டத்தில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரபுக்கள் சபையினரும் கூடிய வெஸ்ற்மின்ஸ்ரர் மண்டபத்தில் அவர் உரையாற்றினார். வெளிநாட்டு அரசாங்கமொன்றின் தலைவரல்லாத ஒருவர் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் ஆற்றிய முதல் உரையாக இது பிரிட்டிஷ் வரலாறாகிறது.


தன்னுடைய ஐரோப்பிய விஜயத்தில் முன்னதாக, நோர்வேயில் 1991ஆம் ஆண்டு அவருக்கு அறிவிக்கப்பட்ட நோபல் பரிசையும் 21 ஆண்டுகளின்பின்னர் பெற்றார். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக அரசியல், பொருளாதார, தத்துவ பட்டதாரியான ஓங் சன் சூ க்யி, 24 ஆண்டுகளின்பின்னர் அங்கு சென்றபோது, ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதி பட்டம் அளித்தது.

மிக நீண்டகாலம் தங்கள் உரிமைகளும் உலகில் தங்களுக்கான இடமும் மறுக்கப்பட்ட பர்மிய மக்களுக்கு, நல்வாழ்வையும் பெருவாய்ப்புகளையும் ஏற்படுத்தவல்ல மாற்றங்களுக்கான ஆதரவைக் கோருவதாக பாராளுமன்ற சபைகளில் ஆற்றிய உரையில் சூ க்யி கூறினார்.

கடக்கவேண்டிய மலைகள், பள்ளங்கள், தகர்க்கவேண்டிய தடைகள் பல இருக்கின்றன. எமது சொந்த உறுதியில் நாம் இவ்வளவுதூரம் வந்தோம். எமது பயணத்தில் மேலும் பல தூரத்தைக் கடக்க பிரிட்டிஷ் மற்றும் உலக மக்களின் ஆதரவு எமக்கு பெரிதும் உதவும் என்று அவர் கூறினார்.

## பாகிஸ்தான்

### புதிய பிரதமர்



பாகிஸ்தானின் புதிய பிரதமராக ராஜா பர்வேஷ் அஷ்ரப் தெரிவாகியிருக்கிறார். உயர்நீதிமன்ற உத்தரவையடுத்து யூசுவ் றஸா கிலானி பிரதமர் பதிவியிலிருந்து விலகியதும், ஆளும் கட்சி வேட்பாளரான அஷ்ரப் புதிய பிரதமராக பாராளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மஹ்தூம் சகாப்டினையே முதலில் பிரதமராக்க எண்ணியபோது, நீதிமன்றம் அவரையும் கைதுசெய்ய ஆணை பிறப்பித்ததையடுத்து அஷ்ரபை ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சி நியமித்தது. எனினும், நீர், மின்சார அமைச்சராகவிருந்த இவர்மீதும் ஏற்கனவே ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டு முற்பகுதியில் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளபோது அஷ்ரபின் பதவிக்காலம் குறுகியதாகவேயிருந்தாலும் பல சவால்கள் அவர் இக் காலத்தில் எதிர்கொள்வார் என்றே அவதானிகள் கருதுகின்றனர்.

அதிபர் சர்தாரிமீது ஊழல் விசாரணைகளை மேற்கொள்ள நீதிமன்றம் விடுத்த உத்தரவை பிரதமர் கிலானி செயல்படுத்த மறுத்ததையடுத்து கிலானியை நீதிமன்றம் பதவியிலிருந்து நீக்கியது. இதே நிலையை அஷ்ரபும் எதிர்கொள்ளநேரும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

சர்தாரி நாட்டின் ஜனாதிபதியாகவிருப்பதால் அவரை விசாரணைக்கு உள்படுத்த முடியாது என்பது கிலானியின் நிலைப்பாடாகவிருந்தது.

பெனாஸிர் புட்டோ பிரதமராகவிருந்த காலத்தில் கணவர் சர்தாரிமீது சுவிஸ் வங்கி கணக்கு தொடர்பில் ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன. இவை உண்மையற்றவை என்றும் அரசியல்நோக்கம் கொண்டவை என்றும் சர்தாரி தெரிவித்துவருகிறார்.

# ஆங்கிலத்தில் அறிவு; தமிழில் உணர்வு மட்டுமே!

### தொலைக்காட்சி சனல்கள்மூலம் மொழியறிவை இழந்துவிடாமல் இருப்பதே பெரிது

### மக்களின் அறிவு, ஆள்பவர்களுக்கு ஆபத்து. வாக்காளர்களின் உணர்வு, ஆட்சியாளர்களுக்கு ஊட்டச்சத்து

தமிழன் பாமரனாகவே இருக்கவேண்டும்; தகவல் அறிவு பெற்றுவிடக்கூடாது என்பதில் எல்லாத் தமிழ்த் தொலைக்காட்சி 'சனல்'களும் கவனமாக இருக்கின்றன. இதில், 24 மணிநேரமும் சினிமா வேண்டுமா, எங்கள் தொலைக்காட்சியையே பாருங்கள் என்ற விளம்பரக் கூச்சலும் காதைத் துளைக்கிறது. 'தமிழா, அறிவின் பக்கம் திரும்பிவிடாதே, அறிவுலகத்தை எட்டிப் பார்த்துவிடாதே' என்ற எச்சரிக்கையை அவர்கள் வேறு வார்த்தைகளில் சொல்கிறார்கள்.

நாட்டின் முக்கியமான நிகழ்வுகளைப் பல தமிழ்த் தொலைக்காட்சி அமைப்புகள் இரவல் 'விஷுவல்'களுடன் ஓரிரு வரிகள் உப்புச் சப்பில்லாமல் சொல்லிவிட்டு, தவறு சொதப்பிவிட்டு, வழக்கமான ஆபாச நடனங்களுக்கும் அபத்த நகைச்சுவைகளுக்கும் அழுகை நாடகங்களுக்கும் திரும்பிவிடுவது வாடிக்கை. செய்தி நேரத்திலும் தமிழன் என்ன பிரமாதமாகத் தெரிந்துகொள்ள முடிகிறது? ஆங்கிலமும் தெரிந்த தமிழன், ஆங்கிலத் தொலைக்காட்சி சனல்களைப் பார்த்து நாட்டு நடப்புகளை அறிவுபூர்வமாகத் தெரிந்துகொள்கிறான். வெகுகாலமாக தமிழ் - ஆங்கில தொலைக்காட்சி சனல்களுக்கு இடையே இந்த வித்தியாசம் இருந்துவருகிறது.

உதாரணத்துக்கு, இந்தோனேஷியாவில் பெரிய சுனாமி ஏற்பட்டது. இந்தியா நெடுக அதன் அதிர்வுகள் உணரப்பட்டன. அன்று, வெகுநேரம் ஆங்கில சனல்களையும் தமிழ் சனல்களையும் மாற்றிமாற்றி பார்த்துக்கொண்டிருந்தார்கள் சிலர். தமிழ்ச் சனல்கள் ஒவ்வோர் ஊரிலும் மக்கள் வீடுகளை, அலுவலகங்களை விட்டு வெளியேவந்த காட்சிகளைக் காட்டி, கண்ணில்பட்டவர்களைப் பேட்டிகண்டன. ஆங்கில தொலைக்காட்சி சனல்களும் அப்படி பேட்டிகண்டன. ஆனால், அத்துடன் நிறுத்திக் கொள்ளவில்லை.

தமிழ்ச் சனல்கள் பீதி, பரபரப்பு என்ற வார்த்தைகளையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தன. எல்லோருமா இப்படி என்று நொந்துபோய், ஒவ்வோரு சனலாக திருப்பிய போது கல்வி நிலையங்களையும் ஒரு பத்திரிகையையும் நடாத்தும் சனல் மட்டுமே பொதுவாக பூகம்பம்பற்றி சில 'கிராபிக்ஸ்' காண்பித்தது. ஓரளவுக்கு விவரமானவர் ஒருவரை அழைத்து, பூகம்பம் பற்றிப் பொதுவாகச் சில வார்த்தைகள் சொல்லச்சொன்னதுடன், அதற்கும் அறிவார்ந்த அக்கறை ஓய்ந்துவிட்டது.

அதேநேரம், வட இந்திய ஆங்கிலத் தொலைக்காட்சிகள் இங்கிலாந்து, அமெரிக்க தொலைக்காட்சிகளுடன் போட்டிபோட்டுக் கொண்டு, இந்தோனேஷிய சுனாமியையும் இந்தியாவின் அதிர்வுகளையும் விவரித்தன. ஸ்ரூடியோவுக்குள் இருந்தபடியே அந்த சனல்களின் செய்தி ஆசிரியர்களும் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களும் பம்பரமாக சுழன்று அதைச் செய்ய முடிந்தது. பூகம்பம் ரிக்டர் அளவுகோலில் 8.7 என்றால் அதன் தாக்கம் எப்படியிருக்கும்; பூமியின் எந்தப் பகுதியில், இந்தோனேஷியா - சுமாத்திரா கடற்பகுதியில் எங்கே, எத்தனை அடி ஆழத்தில் பூமிப்பாளங்கள் பிளவுபட்டன. அப்படிப் பிளவுபட்ட கடலடி நிலம் பக்கவாட்டில்

நகர்ந்ததா, மேலும் கீழுமாக விலகியதா என்பதுபோன்ற தகவல்களைச் சொன்னார்கள். இரண்டுக்கும் என்ன வித்தியாசம் என்பதை விளக்கினார்கள். நம் சனல்களோ மக்கள் கட்டடங்களிலிருந்து வெளியேறினார்கள்; போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது என்பதையே மாற்றி, மாற்றிச் சொன்னார்கள். எந்தத் தொலைக்காட்சியும் தன் செய்தியாளரையும் படப்பிடிப்பாளரையும் உடனடியாக கல்பாக்கத்துக்கோ, கூடங்குளத்துக்கோ அனுப்பவில்லை.

உணர்ச்சிகளைத் தூண்டும் நிகழ்ச்சிகளைப் பெருத்த விளம்பர ஆதரவுடன் நடத்திக் காசு சம்பாதித்தால் போதும் என்று நினைக்கும் தொலைக்காட்சி அமைப்புகள், சொன்னதையே சொல்லிக்கொண்டிருந்தன. அதேநேரத்தில், ஆங்கிலத் தொலைக்காட்சி சனல்கள் 'சீஸ்மாலஜிஸ்ட்ஸ்' என்று சொல்லப்படும் நில அதிர்வியல் நிபுணர்களை அழைத்து இந்தோனேஷிய சுனாமிபற்றி விவாதித்தன. நிபுணர்கள் தொழில்நுட்பச் செய்திகளை எல்லோரும் புரிந்துகொள்ளும்படி எளிதாக சொன்னார்கள்.

எப்படித்தான் அவர்கள் 'கிராபிக்ஸ்' ஏற்பாடு செய்தார்களோ, தகவல்களைப் பெற்றார்களோ தெரியாது ஒரு தொலைக்காட்சி, சுனாமி ஏற்பட்ட பகுதியை வரைபடத்தில் காட்டி, சுனாமி அதிர்வலைகள் செல்லும் வழி, வேகம், நேரம் இவற்றைக் குறிப்பிட்டு, ஏதோ ரயில் அட்டவணைபோல, சுனாமி தன் பாதையில் இந்த இந்த இடங்களை இந்த இந்த நேரத்தில் தாக்கக்கூடும். இந்த சுனாமியில் பூமிப் பாளங்கள் மேலும் கீழும் நகர்ந்திருக்க வாய்ப்பில்லை என்றார்கள். அந்த அவசரத்திலும் அறிவுபூர்வமான தகவல்களை எல்லா ஆங்கில சனல்களும் திரட்டித்தந்தன.

அது எப்படி அவர்களுக்குச் சாத்தியமாயிற்று? நம்மால் ஏன் முடியவில்லை? ஆங்கில சனல்களில் செய்தி ஆசிரியர்கள், நிகழ்ச்சியாளர்கள் பொது அறிவுக்காகவும், பேச்சுத் திறமைக்காகவும், சுறுசுறுப்புக்காகவும், சொந்தமாக முடிவெடுத்துச் செயல்படும் திறமைக்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவசர காலத்தில் உடனடியாக என்ன செய்யவேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும். விரைந்து செயல்படுகிறார்கள். ஆங்கில தொலைக்காட்சி சனல்கள் அர்னாப் கோஸ்வாமி, ராகுல் கன்வால், ஆகாஷ் பெனர்ஜி என்று தங்கள் நிகழ்ச்சியாளர்களின் பெயர்களைப் பெருமையுடன் அறிவித்து நிகழ்ச்சிகளை வழங்குகின்றன.

தமிழ்ச் சனல்கள் நடிகைகளையே முன்னிறுத்துகின்றன. சில சமயங்களில் நடிகைகளைப் பின்னிறுத்துவதும் உண்டு! இங்கே செய்தியாளர்களைத் தேர்ந்தெடுக்க தகுதிகள் சரியாக நிர்ணயிக்கப்படவில்லை. இவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுவதில்லை. சுதந்திரமும் இல்லை. சனலைமீறி ஒரு நிகழ்ச்சியாளர் புகழ்பெற்றுவிட்டால் அவர் விரட்டப்படுவார்.

நிருபர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவதில்லை. 'வந்து, வந்து, வந்து' என்று இரண்டு வார்த்தைகளுக்கிடையே அவர்கள் ஒரு 'வந்து' போடுவார்கள். 'பார்த்தீங்கன்னா, பார்த்தீங்கன்னா', 'இதற்கிடையில்', 'இதற்கிடையில்' என்ற சொற்களும் அடிக்கடி வந்து விழும். பேச்சில் தேவையற்ற பதற்றம் இருக்கும். உச்சரிப்பு படுமோசம். இந்த நிலையில், தமிழன் தொலைக்காட்சி சனல்கள்மூலம் தகவல் அறிவு பெறுவது ஒருபுறம் இருக்கட்டும், அவன் தன் மொழியறிவை இழந்துவிடாமல் இருப்பதே பெரிது. தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து பார்த்தபிறகும் ழ, ல, ள, ன, ண இவற்றில் தடுமாறாத தமிலர்கள் மன்னிக்கவும், தமிளர்கள் மறுபடியும் மன்னிக்கவும், தமிழர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

ஆனால், இந்திய ஆங்கில தொலைக்காட்சி சனல்கள் சர்வதேச தரத்துக்கு இணையாக இருக்கின்றன. ஆங்கில தொலைக்காட்சி சனல்களைப் பார்ப்பவர்கள் உரிய தகவல் அறிவு பெறுகிறார்கள். தகவல் தொடர்பு சாதனங்கள் இப்படித் தரம் தாழ்ந்துபோனபிறகு நிலையில் தமிழர்கள் முன்னேறவில்லை என்று நாம் புலம்புவதில் என்ன பயன்?

தமிழின் முக்கிய சனல்களை நடத்துபவர்கள் ஆங்கிலம் அறிந்தவர்களே. அவர்கள் தங்கள் தகவல் அறிவுக்காக ஆங்கில சனல்களைப் பார்ப்பார்கள். ஹோட்டல் மனேஜர் எங்கே என்று கேட்டால், நல்ல சாப்பாடு சாப்பிட வேறு ஹோட்டலுக்கு போயிருக்கிறார் என்று சொல்லப்படுவதுபோல. தாம் தெரிந்துகொள்வதைத் தமிழ் நேயர்களுக்கும் தர, இவர்கள் சுனாமி நிகழ்வு மற்றும் வேறு அசம்பாவித சந்தர்ப்பங்களில் ஆங்கில தொலைக்காட்சி சனல்களின் விவாதங்களைக் கூர்ந்து கவனித்து உடனே மொழிபெயர்த்து, அதை அடுத்த சில நிமிடங்களில் வழங்கக்கூடியவர்களைத் தயார் செய்யலாமே. ஏன் செய்வதில்லை? அதில் அவர்களுக்கு அக்கறை இல்லை.

மும்பையைத் தீவிரவாதிகள் தாக்கியபோது ஆங்கில சனல்கள் செய்தியாளர்களை சம்பவ இடங்களுக்கு அனுப்பின. அதேநேரம் ஸ்ருடியோ ஒருங்கிணைப்பு, மும்பை, டெல்லி நகரங்களில் உள்ள பிரமுகர்களுடன் பேட்டி, ஸ்ருடியோவில் விவாதம் என்று எல்லா ஆங்கில சனல்களும் மும்முரமாக செயல்பட்டபோது, இங்கே அபத்த காமெடிக் காட்சிகளும் அழுகை சீரியல்களுமே தொடர்ந்தன.

வை. எஸ். ராஜசேகர ரெட்டியின் ஹெலிகொப்டர் காணாமல்போனதிலிருந்து, அவரது சடலம் கண்டுபிடிக்கப்படும்வரை ஆங்கில சனல்களும் தெலுங்கு சனல்களும் ஓயவில்லை. அப்படி தமிழ் சனல்கள் செயல்படுவதில்லை. இதற்குப் போதிய தொழில்நுட்ப வசதிகள் இல்லை என்று சொல்லமுடியாது. பெரிய சனல்களிடம் இந்த வசதி இருக்கிறது. அரசியல் பலம் உள்ள தொலைக்காட்சி சனல்களுக்கு அபரிமிதமான பணமும் உண்டு. செல்வாக்கும் உண்டு. உள் நோக்கங்களும் உண்டு. ஒரு முக்கிய உள்நோக்கம், விவரமான நேயர்கள் வாக்காளர்கள் ஆகமாட்டார்கள் என்பதே.

அநேகமாக எல்லா தமிழ் சனல்களின் ஜனனமும் அரசியலில்தான். சனல்களை நடத்தும், ஆட்டுவிக்கும் அரசியல் சக்திகளுக்கு நன்றாகப் புரியும் தமக்குத் தேவை அப்பாவி வாக்காளர்களேயன்றி, விவரமறிந்தவர்கள் அல்ல என்று. அரசியல்வாதிகள் செய்வதையே இந்தச் சனல்களும் செய்கின்றன. மக்களுக்கு அரிசி, பருப்பு, முட்டை, பருத்திக்கொட்டை, புண்ணாக்கு, விளக்கெண்ணெய், விளக்குமாறு கொடுக்கலாம். ஆனால், அறிவைக் கொடுத்துவிடக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வு அவர்களிடம் இருக்கிறது. மக்களின் அறிவு, ஆள்பவர்களுக்கு ஆபத்து. வாக்காளர்களின் உணர்வு, ஆட்சியாளர்களுக்கு ஊட்டச்சத்து.

உணர்வு தேர்தலில் வேலை செய்யும். அறிவு விமரிசனம்தான் செய்யும். உணர்வு வாக்களிக்கும், அறிவு அதைச் செய்யாது. அரசியல்வாதிகள் அறிவாளிகள். அவர்களுக்கு அறிவை விலக்கத் தெரியும்; உணர்வை ஊட்டத் தெரியும். எதைக் கொடுப்பது என்பது அரசியல்வாதிகளுக்கு தெரிகிறது. எதை வாங்குகிறோம் என்பது மக்களுக்குத் தெரியவில்லையே. ■

# வட்டுக்கோட்டையிலிருந்து மட்டக்களப்புக்கு

## தமிழர்களுடைய அரசியல் தீர்வாக வட்டுக்கோட்டை தீர்மானத்தின் 'தனிநாடு' கோரிக்கை, 35 ஆண்டுகளின் பின்னர் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாநாட்டில் மாற்றம்பெறுகிறது

தண்டாயுதன்

இலங்கையின் அரசியல் நிலவரங்களில் அண்மைக்காலங்களில் சில புதிய நகர்வுகள் ஏற்படுகின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகளை முறியடித்த மூன்றாம் ஆண்டு நினைவுதினத்தையொட்டி கொழும்பில் இடம்பெற்ற பெரும் எடுப்பிலான இராணுவ வைபவங்களின் பின்னணியில் முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட்டார் என்ற ஒரே காரணத்துக்காக, பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட நிலையில் சரத் பொன்சேகா கடந்த இருவருடகாலம் சிறைவைக்கப்பட்டிருந்தார்.

தற்போது சரத் பொன்சேகா விடுதலையாகியுள்ளார். ஆயினும், அவர் முற்றுமுழுதாகக் குடியியல் உரிமைகளை அநுபவிக்கமுடியாத ஒரு பிரஜையாகவே இருக்கமுடியும். அரசியலில் ஈடுபடவோ அல்லது தேர்தல்களில் போட்டியிடவோ அவரால் முடியாது.

இவையாவற்றுக்கும் மேலாக, புலிகளுக்கெதிராக இராணுவத்தை கடந்த காலங்களில் தலைமை தாங்கிய தளபதிகளில் மிகவும் திறமையானவர் எனப் பெயர்பெற்றவர் சரத் பொன்சேகா.

மூன்று வருடங்களுக்கு முன்னர் புலிகளை முல்லைத்தீவில் முறியடித்தமை மட்டுமல்ல, கடந்த காலங்களில் புலிகளுக்கெதிரான பல முக்கிய இராணுவ முன்நகர்வுகளை முன்னெடுப்பதிலும் சரத் பொன்சேகா முனைப்புடன் செயல்பட்டவர் என்பதை அறியமுடிகிறது.

ஆயினும், அவர்மீது தாக்கலான பல்வேறு வழக்குகளைக் காரணம்காட்டி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவுக்கமைய சரத் பொன்சேகா வகித்த இலங்கை இராணுவத்தின் ஜெனரல் தரத்திலான அதிஉயர் பதவி விலக்கப்பட்டதோடு, இராணுவ சேவையில் அவர் பெற்றிருந்த அனைத்து பதவிகள் மற்றும் பதக்கங்களும் அரசாங்கத்தினால் மீளப்பெறப்பட்டிருந்தன.

சரத் பொன்சேகாமீதான இந்த நடவடிக்கையை எடுப்பதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைவிட அவரது சகோதரரான பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பின்னணியில் செயல்பட்டிருந்தார்.

எனவே, 1970 ஆம் ஆண்டுமுதல் 35 வருட காலத்துக்கும் மேலாக இராணுவ சேவையில் படிப்படியாக முன்னேறி, ஒரு தளபதியாகப் பதவிவகித்த போதிலும் தற்போது பட்டம், பதவி இழந்த நிலையில், ஒரு சாதாரண சிப்பாயின் தரத்துக்குத் தாழ்த்தப்பட்ட நிலையில் சரத் பொன்சேகா காணப்படுகின்றார்.

சரத் பொன்சேகாவினுடைய விடுதலையைப் பொறுத்தவரை சர்வதேச அழுத்தமும் பினன்ணியில் இருந்ததையே நன்கு அவதானிக்கமுடிகின்றது.

வெளிப்படையாக இல்லாவிட்டாலும், கடந்த மார்ச்மாதம் ஜெனிவாவில் கொண்டுவரப்பட்ட இலங்கைக்கெதிரான மனித உரிமைப்பேரவையின் அழுத்தமும் சரத் பொன்சேகாவின் விடுதலையை துரிதப்படுத்த உதவியிருக்கலாம் என கருதலாம்.

இலங்கையின் இன்றைய ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை சர்வதேச அழுத்தம் இவர்களுக்கு சற்று ஒரு சிம்ம சொப்பனமாக இருப்பதை இப்போது அவதானிக்கமுடிகிறது. இவை யாவற்றுக்கும் மேலாக அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகள் இலங்கை தொடர்பாகக்கொண்டுள்ள நிலைப்பாடுகளும், மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தைச் சற்று 'இருத்தி, எழுப்புவதாகவே' அமைந்துள்ளன.

இலங்கையின் வெளியுறவு அமைச்சர் பேராசியர் ஜி. எல். பீரிஸ் அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலறி கிளின்டனை வாஷிங்டனில் சந்தித்திருந்தார்.

அச்சமயம் இலங்கையின் இனப்பிரச்னைக்கான தீர்வு மற்றும் அடிப்படை மனித உமைகளைப் பேணுதல் தொடர்பான கற்றுக்கொண்ட பாடங்களும், நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் சிபார்சின் அடிப்படையிலான யோசனைகள் அடங்கிய அறிக்கையொன்றை ஹிலறி கிளின்டனிடம் பீரிஸ் சமர்ப்பித்திருந்தார்.

கிளின்டனும் இதனைச் சாதகமான முறையில் பெற்றக்கொண்டதுடன், பீரிஸின் அறிக்கையினை பகிரங்கப்படுத்தவேண்டுமெனவும், இதன்மூலம் சர்வதேச சமூகமும், இலங்கை மக்களும் இலங்கை அரசின் நிலைப்பாடுகளை அறியமுடியுமெனவும் குறிப்பிட்டிருந்தார் .

கற்றுக்கொண்ட பாடங்களும், நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு யுத்தம் முடிவுற்றதும் அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்டதாகும். நாடுதழுவியதாக இந்த ஆணைக்குழுவின் அமர்வுகள் இடம்பெற்றதோடு, குறிப்பாக வடக்கு - கிழக்கில் யுத்தத்தினாலும் அசாதாரண நிலவரங்களினாலும் பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளைக் கேட்டறிந்ததோடு அரசியல்வாதிகள், புத்திஜீவிகள் எனப் பலரதும் அபிப்பிராயங்கள், கருத்துக்களை அறிந்த நிலையிலேயே கற்றறிந்த பாடங்களும், நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது .

ஜெனிவாவில் மனித உமைப் பேரவை தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதுகூட கற்றுக்கொண்டபாடங்களும், நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு அறிக்கையின் சிபாரிசின் அடிப்படையில் தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்படவேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்தது .

ஜெனிவா தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர், இந்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்று இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையில் ஏப்ரலில் இலங்கைவந்திருந்தது. அக் குழுவும் கூட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சிபார்சுகளை பெரிதும் வரவேற்றிருந்தது.

இருந்தபோதிலும், ஆட்சியாளர்கள் பாராளுமன்ற தெரிவுக்குழுமூலமான தீர்வு என்ற அடிப்படையிலேயே பிடிவாதம் பிடித்து நிற்கின்றனர் .

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான பேச்சுக்கள் 2011 ஆம் ஆண்டு ஜனவரியில் ஆரம்பமாகின. சுமார் 17 தடவைகள் இப் பேச்சுக்கள் நடைபெற்று பின்னர் இடைநிறுத்தப்பட்டன. பாராளுமன்ற தெரிவுக்குழு என்ற புதிதான ஒன்றை ஆட்சியாளர் முன்வைத்துள்ள நிலையில் பேச்சுக்கள் இப்போது ஸ்தம்பித்துள்ளதையும், எவ்வித முன்னேற்றகரமான முடிவுகளும் எட்டப்படாதிருப்பதையும் அவதானிக்கமுடிகின்றது .

கடந்த காலங்களில்கூட அனைத்துக்கட்சி மகாநாடு, அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழு என்று கூறி பலதரப்பட்ட நடவடிக்கைகள் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக ஆராயப்பட்டன. ஆயினும், அவை வெறும் கண்துடைப்பாகவும், காலத்தைக் கடத்தும் நடவடிக்கைகளுமாகவே அமைந்தன.

இதன்காரணமாகவே அரசுடன் நேரடிப்பேச்சுக்கள் தவிர, பாராளுமன்ற தெரிவுக்குழு நடவடிக்கைகளை முன்னெடுக்க தமிழ் தேசிய கூட்டமைப்பு பின்நிற்கிறது .

எனவே, சமாதான பேச்சுக்களுக்கான அறிகுறிகள் எவ்விதத்திலும் தென்படாத பின்னணியில்தான் தமிழரசுக் கட்சியின் 14 ஆவது தேசிய மகாநாடு மட்டக்களப்பில் கோலாகலமான முறையில் நடைபெற்றிருந்தது. இங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஷ்டியை அடிப்படையாகக்கொண்ட ஓர் அரசியல் தீர்வையே ஏற்றுகொள்வதென்ற தீர்மானம் முக்கியமானதாக அமைந்திருந்தது.

1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின்போது, தனிநாடு கோரிக்கையை முன்வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி தீர்மானமியற்றியிருந்தது. ஆனால், சுமார் 35 வருடங்களின் பின்னர் மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியின் 14ஆவது தேசிய மாநாட்டில் தமிழ் ஈழம், தனிநாடு போன்றவிடயங்கள் பேசப்படாது, ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளான தீர்வு பற்றியே வலியுறுத்தப்பட்டிருந்தது .

அத்துடன், சர்வதேச சமூகத்தின்மூலமே இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு விமோசனம் கிடைப்பதற்கான வழிபிறக்கமுடியுமெனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. புலம்பெயர்ந்த தமிழர்களின் பங்களிப்பு தொடர்ந்து உத்வேகத்துடன் இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக இருக்கவேண்டியதன் முக்கியத்துவமும் வற்புறுத்தப்பட்டிருந்தது .

இலங்கைத் தமிழரசுக் கட்சி பழமைவாய்ந்த தமிழ்க் கட்சியாகும். இக் கட்சியே சமஷ்டி முறையிலான தீர்வுத் திட்டத்தை முன்வைத்தது. ஆயினும், பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் ஆகியவற்றின் மூலமாக எட்டப்படவிருந்த தமிழரசுக் கட்சியின் தீர்வுத்திட்டங்கள் முறியடிக்கப்பட்டன.

எனினும், தமிழரசுக்கட்சி ஒரு பிரதான அரசியல் கட்சியாகவும், அதனோடிணைந்ததாக ஏனைய பல அரசியல் கட்சிகள் தமிழ் தேசிய கூட்டமைப்பில் ஒன்றுசேர்ந்துமிருக்கின்றன.

தமிழரசுக் கட்சி தனிநாடு கோ ்கை

**தமிழ் மக்களுடைய தனித்துவங்களையே இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளிலேயே இலங்கையின் ஆட்சியாளர்கள் முனைப்பாக இருக்கிறார்கள்**

**சமாதான பேச்சுக்களுக்கான அறிகுறிகள் எவ்விதத்திலும் தென்படாத பின்னணியில், மட்டக்களப்பு மாநாட்டில் ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளான தீர்வு வலியுறுத்தப்பட்டது**

யைக் கைவிட்டுள்ளதாக அறிவித்துள்ளபோதிலும், எதிர்கால அரசியல் சவால்களில் சாத்வீக ரீதியாகவே போராடவிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் வரலாறு சுதந்திர இலங்கையில் வடக்கு - கிழக்குத் தமிழர்களின் அரசியல் வரலாறாகவும் அமைந்துள்ளது.

எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் அரசியல் நிலைப்பாடுகள், சாத்வீகத்தில் அவர் கொண்டிருந்த நம்பிக்கை ஆகியவையே தமிழரசுக் கட்சியை கடந்த 30 வருடகால மோசமான அரசியல் நிலவரங்களுக்கு மத்தியிலும் நிலைதளராமல் நிலைநிறுத்தியுள்ளன.

வடக்கு - கிழக்கு தமிழர்களின் பிரச்னைக்கு திரு செல்வநாயகம் வகுத்திருந்த வழியில் தென்னிலங்கை ஆட்சியாளர்களும் ஒத்திசைவாக வந்திருப்பார்களேயானால் இலங்கை இன்று சிங்கப்பூரைப்போல ஒரு சிறந்த நாடாக மாற்றங்கண்டிருக்கும். ஆனால், இன்று இலங்கையின் அரசியல்போக்கு, அதன் ஆட்சியாளர்களது நடைமுறைகள் என்பவை தமிழர் பிரச்னையை உரிய வகையில் அணுகுவதாக தெரியவில்லை.

தமிழ் மக்களுடைய தனித்துவங்களையே இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளிலேயே இலங்கையின் ஆட்சியாளர்கள் முனைப்பாக இருக்கிறார்கள். பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அண்மையில் பி.பி.ஸி.க்கு வழங்கிய பேட்டியொன்றில், யாழ்ப்பாணப் பிரதேசம் தமிழர்களுக்கு ஏக போக உரிமையானதல்ல என்று கூறியுள்ளார்.

இக்கூற்றுப்பற்றி கருத்து வெளியிட்டுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன், தமிழர் பிரச்னையை அரசு சரிவர இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்பதற்கு கோத்தபாயவின் கருத்து நல்ல உதாரணமாக இருக்கின்றதெனக் குறிப்பிட்டிருந்தார்.

இதேசமயம், தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன், வடக்கு - கிழக்கில் தமிழர்களின் குடிப்பரம்பலை மாற்றியமைத்து, பிரதேசத்தைத் துண்டாடுவதில் ஆட்சியாளர்கள் ஈடுபட்டுள்ளதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்நிலையில், வடக்கு - கிழக்குத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை, அவர்களது தனித்துவம், சமூக, பொருளாதார நிலவரங்கள் என்பவை என்றுமில்லாத அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. ■






மட்டக்களப்பில்
இலங்கை தமிழ் அரசு கட்சி மாநாட்டின்
தொடக்க நிகழ்வுகள்

பிரிட்டிஷ் மகாராணியின் பொன்விழா

# பொலிவின் நினைவுகள்





வைரவிழாக் கொண்டாட்டங்கள், 'இனி வரப்போகும் பல ஆண்டுகளில் எம் வாழ்வில் ஒரு பொலிவை ஏற்படுத்தும்' என்று, நான்குநாள் கோலாகல கொண்டாட்டங்களின் முடிவில் மகாராணி தெரிவித்தார். தன்னை வெகுவாக நெகிழவைத்துவிட்ட நிகழ்வு என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாலி



















**வைரவிழா நிகழ்வுகள் சில**

தேம்ஸ் நதியில் படகுகள் பவனி;
பக்கிங்ஹாம் மாளிகை முன்னதாக
பிபிசி ஆதரவிலான இசை நிகழ்ச்சி;
குதிரைவண்டி பவனி


PS.CO.UK

‘இனி வரப்போகும் பல ஆண்டுகளில் எம் வாழ்வில் ஒரு பொலிவை இந்த வைரவிழா ஏற்படுத்தும்’ என்று, நான்கு நாள் கோலாகல கொண்டாட்டங்களின் முடிவில் இரண்டாம் எலிஸபெத் மகாராணி நாட்டு மக்களுக்கு தெரிவித்தார்.

முடியாட்சியில் விருப்போ, வெறுப்போ ஆனால், அறுபது ஆண்டுகால ஆட்சியின் வைரவிழாவைத் தமது வாழ்வில் ஓர் அபூர்வமான நிகழ்வாக பலரும் ஒப்புக்கொள்கிறார்கள்.



1952 பெப்ரவரி 6ஆம் தேதி. பாடசாலையில் பிரிட்டிஷ் தேசிய கொடி (யூனியன் ஜக்) அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டபோது எல்லோர் மனதிலும் பலவிதமான யூகங்கள் எழுந்தன. ஒரு சிறுமி சொன்னாள்; “எலிஸபெத் இளவரசியை சிங்கம் கடித்துச் சாப்பிட்டுவிட்டதுபோலிருக்கிறது.’’

இளவரசி எலிஸபேத்தும் கணவர் பிலிப் இளவரசரும் ஆறு தினங்களுக்கு முன்னர்தான் ஓய்வுக்காக கெனியா சென்றிருந்தார்கள். வனவிலங்குகள் நிறைந்த காட்டுப்பகுதியில் மர உச்சியில் அமைந்த உல்லாச விடுதி ஒன்றில் அவர்கள் முதல்நாள் இரவு தங்கியமை செய்தியாக பிரிட்டனில் தெரிந்திருந்தது. ஆனால், இளவரசியாக அந்த மர உச்சியில் ஏறிய அவர், ஒரு வரலாற்று சாதனையுடன் மறுநாள் மகாராணியாக கீழே இறங்கினார்.

இங்கே பிரிட்டனில் அந்த இரவு, தந்தையார் ஆறாவது ஜோர்ஜ் மன்னர் நித்திரையில் காலமானார்.

ஜோர்ஜ் மன்னரின் மறைவை அறிவித்துத்தான் தேசிய கொடி அரைக்கம்பத்தில் பறந்ததென்பது பின்னர்தான் புரிந்தது.

அவுஸ்திரேலியா, நியூசிலாந்துக்குமாக திட்டமிடப்பட்டிருந்த இந்த சுற்றுப்பயணத்தில் 56 வயதான தந்தையார் ஜோர்ஜ் மன்னர் சுகவீனமுற்றநிலையில் பயணம்செய்ய இயலாதுபோக, இளவரசி எலிஸபெத்தும் பிலிப் இளவரசரும் அப் பயணத்தைத் தொடர்ந்தனர். ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் மணமாகியிருந்த இளவரசிக்கு வயது 25.

புற்றுநோய் காரணமாக பல்வேறு சத்திரசிகிச்சைகளுக்கு உள்ளாகி, உடல்நிலை குன்றியிருந்த மன்னர், விமான நிலையத்தில் புதல்வியையும் கணவரையும் வழியனுப்பிவைத்தார். 1952 ஜனவரி 31 அது.

பெப்ரவரி 5ஆம் தேதி நைரோபியிலிருந்து நூறு மைல்கள் தொலைவில், வனவிலங்குகள் சரணாலயம் ஒன்றில் அவர்கள் அன்றைய பொழுதைக் கழித்தார்கள். கெனியாவின் பிரதம நீதியரசர் அளித்த அரச இராப்போசனத்தை முடித்து அந்த மர உச்சி உல்லாச விடுதியில் இரவு தங்கியபோது, இளவரசியின் அந்தரங்க செயலாளர் இளவரசர் பிலிப்பின் உதவியாளருக்கு மன்னர் மரணமாகிவிட்ட செய்தியை தெரிவித்தார். அப்போது 6ஆம் தேதியாகியிருந்தது.

முடிக்குரிய வாரிசான இளவரசி எலிஸபெத், இப்போது எலிஸபேத் மகாராணி.

காலையில் அந்த மர உச்சி விடுதியிலிருந்து இறங்கி, 20 மைல்கள் தொலைவில், கெனிய அரசாங்கம் திருமணப் பரிசாக அவர்களுக்கு அளித்திருந்த தோட்டத்தில் அமைந்த ‘சகானா’ விடுதிக்கு வந்தபோது, தந்தையாரின் செய்தியை இளவரசர் பிலிப் தெரிவித்தார்.



பக்கிங்ஹாம் மாளிகையில் பிரதமர் வின்ஸ்ரன் சேர்ச்சிலுடன்
ஜோர்ஜ் மன்னரும் மகாராணியும் புதல்விகளும்

25 ஆவது வயதில் மகாராணியான எலிஸபெத், தந்தையாரின் மரண துயரங்களை ஒருபுறம் வைத்துவிட்டு, தனது மீதி பயணங்களை தொடரவியலாது இரத்துச்செய்யநேரும் மன்னிப்புக் கடிதங்களை எழுதினார். உடனடியாகவே அவர் லண்டன் திரும்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பிரதமர் வின்ஸ்ரன் சேர்ச்சில் விமானநிலையத்தில் மகாராணியை வரவேற்றார்.

தந்தையாரின் மரணம் அதிர்ச்சியை அளித்தாலும், மிகவும் நோயுற்றிருந்த நிலையில் அதனை ஓரளவு அவர் எதிர்பார்த்துமிருந்தார். மன்னரும், தனது புதல்வியைத் தன்னுடைய அலுவல்களில் தனக்குப் பதில் ஈடுபடுத்தி, வெளிநாட்டுத் தலைவர்களுடன் பழகவைத்து, பலவிதங்களிலும் அவரைத் தயார்படுத்தியும் வந்தார்.

எதிர்பராதவிதத்திலேயே மன்னரான ஜோர்ஜ் மன்னர், பொதுவாகவே பெரிதும் மதிக்கப்பட்டார். இரண்டாம் உலக போரை எதிர்கொண்டார். பின்னர், அவரது உடல்நலம் குன்றத்தொடங்கியது.

மன்னர் ஆறாவது ஜோர்ஜின் மரணம் பெருமளவு உணர்வைத் தூண்டாவிடினும், மிகுந்த மரியாதையுடன் உணரப்பட்டது. அந்த உணர்வில் இன்னோர் ஆவலும் கிளர்ந்தது.

அழகான, இளம் இளவரசி எலிஸபெத், மகாராணியாகிறார்!

1952 பெப்ரவரி 8ஆம் தேதி இளவரசி எலிஸபெத், சென் ஜேம்ஸ் மாளிகையில் நடைபெற்ற 20 நிமிட வைபவத்தில் மகாராணியாக தன்னை சம்பிரதாயபூர்வமாக பிரகடனப்படுத்தினார். பொதுநல நாடுகளின் தலைவியாகவும் அப் பிரகடனம் அமைந்தது. "என்னுடைய தந்தையாரின் திடீர் மறைவினால் ஆட்சியின் கடமைகளையும் பொறுப்புக்களையும் ஏற்க நான் விழைகிறேன். தன்னுடைய ஆட்சிக் காலம் முழுமையும் எனது தந்தையார் ஆற்றியவிதத்திலேயே, உலகம் முழுவதிலுமாக பரந்து வாழ்கின்ற எனது மக்களின் மகிழ்ச்சியையும் சுபீட்சத்தையும் பெருக்க நான் எப்போதும் உழைப்பேன் என்றுசொல்வதில் என் உள்ளம் பெருநிறைவடைகிறது'' என்று அவர் பிரகடனம்செய்தார்.

ஐம்பது மில்லியன் சனத்தொகையைக் கொண்டிருந்த பிரிட்டனில் அப்போது ஒன்றரை மில்லியன் தொலைக்காட்சிப் பெட்டிகளே இருந்தன. மூன்று தினங்கள் வெஸ்ற்மின்ஸ்ரர் மண்டபத்தில் மன்னரின் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தபோது, சுமார் 3 லட்சம் மக்கள் அஞ்சலிசெலுத்தினார்கள்.

வின்சர், புனித ஜோர்ஜ் தேவாலயத்தில் பெப்ரவரி 15ஆம் தேதி அவரின் உடல் அடக்கம்செய்யப்பட்டது.

மரண ஊர்வலம் தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டாலும், ஆராதனைகள் ஒலிவடிவில் மட்டுமே இடம்பெற்றன. தொலைக்காட்சி, ஓர் அந்தரங்க ஊடுருவலாகவே அப்போது பெரும்பாலும் கருதப்பட்டது. 'உலகின் மிகப்பெரும் ஆபத்து இது' என்றுதான் கன்ரபரி ஆயர் அப்போது தொலைக்காட்சியை அடையாளப்படுத்தினார்.

ஆனாலும், தொலைக்காட்சி மோகத்தை ஏற்படுத்தியெழுந்த முதல் பேரலையாக இது அமைந்தது.

1953 ஜூன் 2ஆம் தேதி எலிஸபெத் மகாராணியின் முடிசூட்டுவிழா நடைபெற்றது. வானிலை அவதானிகளின் ஆலோசனையுடன் பிரகாசமான கோடை நாளாக அது நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், பிரிட்டிஷ் சாம்ராஜயத்தின் பேரரசியைப் போற்றி, மாமழையும் அன்று வாழ்த்தியது.

தொலைக்காட்சி வரலாற்றில் செம்மையாக






வைரவிழா கொண்டாட்டங்களில் அரச விமானப் படையின் சாகசங்கள்

ஒளிபரப்பான முதல் நிகழ்ச்சியாகவும் அது அமைந்தது.

விக்ரோறியா மகாராணிக்குப் பின்னர் மிக நீண்ட காலம் அரசாள்பவராக எலிஸபேத் மகாராணி பிரிட்டிஷ் வரலாற்றில் இடம்பெற்று, அவரது ஆட்சிக் காலத்தின் 60 ஆண்டு நிறைவை அவர் இப்போது எய்தியிருக்கிறார். விக்ரோறியா மகாராணி 64 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார்.

முன்னதாக, மூன்றாம் எட்வேட் மன்னர் 50 ஆண்டுகள்; மூன்றாவது ஹென்றி 56 ஆண்டுகள்; மூன்றாம் ஜோர்ஜ் 59 ஆண்டுகள் ஆட்சியிலிருந்தனர். பிரதமர்கள் வருவார்கள், போவார்கள்: ஆனால், அரசர்களும் அரசிகளும் அரசாங்கத்தின் ஒருவகையான தொடர்ச்சியைப் பேணுவதாக முடியாட்சிக்கு ஆதரவானவர்கள் கருதுகிறார்கள்.

தன்னுடைய 60 ஆண்டுகள் ஆட்சிக் காலத்தில் எலிஸபெத் மகாராணி 12 பிரதமர்களைப் பதவியில் பார்த்திருக்கிறார். முதல் பிரதமர் சேர் வின்ஸ்ரன் சேர்ச்சில் வயதில் பாட்டனாரைப்போலிருந்தபோது, தற்போதைய பிரதமர் டேவிட் கமரோன் மகாராணிக்கு பேரப் பிள்ளையைப் போன்றவர்.

பொதுவாக இவர்கள் எல்லோருடனுமே நியாயமான அளவில் ஒரு நல்லுறவை மகாராணி எப்போதும் பேணிவந்ததாகவே அரசியல் அவதானிகள் மதிப்பிடுகிறார்கள். இல. 10, டவுணிங் தெருவில் குடிவந்த பலர் முடியாட்சியைப் பாதிப்பதும் அலட்சியப்படுத்துவதுமான போக்குகளைக் கொண்டிருந்தபோதிலும், மகாராணி தனது பெருந்தன்மையைப் பேணுவதில் இதுவரை மிகவும் சிறப்புடன் விளங்குவதாகவே கணிக்கப்படுகிறார்.

பிரிட்டிஷ் முடியாட்சியின் அதிகாரங்கள் பலகாலமாகவே சிறிதுசிறிதாக பறிக்கப்பட்டுவந்தன. எனினும், 1952இல் எலிஸபேத் மகாராணி முடிசூடியவேளையில் அதிகாரங்கள் பல அவர்வசமிருந்தன. பிரதமர் ஒருவர் இராஜிநாமா செய்யும்வேளையில், தான் விரும்பும் ஒருவரை அழைத்து புதியதோர் அரசாங்கத்தை அமைக்கும் அதிகாரம் அவரிடமிருந்தது. அதுபோலவே, பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான பிரதமரின் கோரிக்கையை ஏற்கும் அல்லது மறுக்கும் அதிகாரமும் இருந்தது.

ஆனாலும், பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தை அவர் அண்மையில் இழந்தார். 2015 மேயில் நடைபெறவிருக்கும் அடுத்த பொதுத் தேர்தலின் பின்னர் பாராளுமன்ற பதவிக்காலத்தை வரையறுக்கப்பட்ட ஐந்து ஆண்டுகளாக நீடிக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து இந்த அதிகாரம் முடியாட்சியிடமிருந்து அகல்கிறது.

பிரதமர் ஒருவர் மரணமடையும்போது அல்லது இராஜிநாமா செய்யும்போது, அரசாங்கத்தை அமைக்க எவரை அழைப்பதென்பதற்கான ஆலோசனைகளை அரசியல் நிபுணர்களுடனும் சிரேஷ்ட அரசியல்வாதிகளுடனும் அவர் மேற்கொள்வதும் தற்போது இல்லாமல் போயிருக்கிறது. அரசியல் கட்சிகள் தாமே தமது தலைவரைத் தெரிவதன்மூலம் இந்த உரிமை மகாராணியிடமிருந்து இல்லாது போகிறது. ஜனநாயகமும், அரசியல் சட்ட அதிகாரம் மிக்க மரபுவழி முடியாட்சியும் இணைந்த பிரிட்டனின் ஒரு சமநிலை அரசமைப்பு, இப்போது ஜனநாயக பண்புகள் இல்லாதுபோகும்



**பொன்விழா நிகழ்வாக 2002 ஜூன் 6ஆம் தேதி லண்டன், உயர்வாயிற்குன்று முருகன் ஆலயத்துக்கு விஜயம்செய்தார்**

அரசியல்வாதிகளிடம் அதன் சமநிலையை இழப்பதான கருத்தும் நிலவுகிறது.

எடுத்துக்காட்டாக, பாராளுமன்றத்தின் வரையறுக்கப்பட்ட கால எல்லைக்கான புதிய சட்டம், தற்போதுள்ளதுபோன்ற கூட்டு அரசாங்கமொன்றின் பிளவைத் தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஜனநாயக விரோத செயல்பாடு என்று கூறப்படுகிறது.

பிரிட்டனை ஐரோப்பாவுடன் இணைக்க பிரதமர் எட்வேட் ஹீத் எடுத்த நடவடிக்கைகளும் மகாராணி மக்களுக்கு அளித்த சத்தியப்பிரமாண வாக்கிலிருந்து அவரை மீறவைத்தது. ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் இணைந்துகொண்டதன்மூலம் முற்றிலும் பிரிட்டிஷ் சட்டங்களும் வழமைகளுமென்றில்லாமல், பெருமளவில் பிரசல்ஸின் ஐரோப்பிய பாராளுமன்ற சட்டங்களும் வழமைகளுமே பிரிட்டனில் கையாளப்படுகின்றன. ஜோன் மேயரும் கோர்டன் பிரவுனும் ஒப்பமிட்ட மாஸ்ரிச்ற், லிஸ்பன் ஒப்பந்தங்கள் இந்த நிலையை மேலும் விசாலப்படுத்தின.


முடிக்குரிய காணிகளின் வருமான வரியை அரசுக்கு செலுத்தும் ஓர் உடன்பாடு 1937இல் ஏற்பட்டிருந்தாலும், மகாராணியை வருமானவரி செலுத்த வைத்ததன்மூலம் பிரதமர் ஜோன் மேயர் பிரபல்யத்தைப் பெற்றார். பெருஞ்செலவினதானதென்ற குற்றச்சாட்டில் அவர் பெரிதும் நேசித்த 'பிரிற்றானியா' ஆடம்பர கப்பலும் 1997இல் நிறுத்தப்பட்டது.

இளவரசி டயானாவின் மரணத்தையடுத்து பேரர்கள் வில்லியம், ஹரியுடன் அத் துயரவேளையில் மகாராணி ஸ்கொட்லாந்து, பல்மோரல் மாளிகையில் தங்கியிருந்தபோது, லண்டனில் லட்சக்கணக்கான மக்களுடன் அத்துயரில் அவர் இணைந்துகொள்ள ரோனி பிளேயர் தனது அரசியல் நோக்கங்களுடன் மகாராணியை வற்புறுத்தினாரென்றும் கருதப்படுகிறது.

தன்னுடைய ஆறு தசாப்த காலத்தில் சகல அரசியல் கட்சிகளையும் சார்ந்த அரசியல் தலைவர்களும் பல்வேறு விதங்களில் தமது லாபங்களுக்காக பயன்படுத்தினாலும், அனைத்து அரசியல்வாதிகளையும்விட உயர்வான மதிப்புடனும் பிரபல்யத்துடனும் மகாராணி இன்னமும் திகழ்கிறார்.

1997இல் இளவரசி டயனாவின் மரணத்தையடுத்து எழுந்த கருமேகங்களையெல்லாம் விலக்கி, தனது சேவைகளாலும், கௌரவத்தினாலும், நடத்தையாலும் தன்னை அவர் ஓர் உன்னத நிலையில் பிரகாசமுறச் செய்கிறார். கடந்த ஆண்டு, பேரனான இளவரசர் வில்லியம் - கேற் மிடில்ரோன் திருமணமும் பொதுமக்கள் அபிப்பிராயத்தில் சாதகமான ஒரு நிலையை கணிசமான அளவில் ஏற்படுத்தியிருக்கிறது.

2015 செப்ரெம்பர் 10 வரை அவர் மகாராணியாக தொடர்ந்தால், பிரிட்டனை அதிகூடிய காலம் ஆண்ட அரசியாக வரலாற்றை அவர் சாதிப்பார். ■







# தணிய மறுக்கும் வெறுப்பு; அணைய மறக்கும் நெருப்பு

**பிரச்னைகள் ஆழமானவை; மதப் பிரிவுகளின் வேற்றுமைகளில் வேர்கொண்டவை. வறுமை, சம வாய்ப்பின்மை ஆகியவற்றால் விசிறிவிடப்படுபவை**

அரவிந்தன்






சிரியாவில் நடைபெறும் வன்முறை ஓய்வதாக தெரியவில்லை. கடந்த ஆண்டு அரசுக்கு எதிராக தொடங்கிய கிளர்ச்சியும் அதைக் கட்டுப்படுத்த அரசு தன் படைகளை ஏவிவிட்டதுமாகச் சேர்ந்து இதுவரை 10 ஆயிரம்பேருக்கு மேல் பலிவாங்கிய கலவரமாக இது உருவெடுத்துள்ளது. பொதுமக்கள், கிளர்ச்சியாளர்கள், இராணுவத்தினர் என்று பலதரப்பினரும் பலியாகிவருகின்றனர்.

அண்மையில், சிரியாவின் ஒரு கிராமப்புறம் ஹோலாவில் சிறுவர்கள் உள்பட 108 பேர் ஒருசில மணி நேரங்களுக்குள் கொலைசெய்யப்பட்டனர். சிரிய அரசுதான் இந்தக் கொலைகளுக்குக் காரணம் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

சிரிய அதிபர் பஷார் அல்-அசாத்துக்கு எதிரான போராட்டம் பல்வேறு நகரங்களில் நடைபெறுகிறது. பொதுமக்களை அடக்க இராணுவத்தினர் முடுக்கி விடப்பட்டுள்ளனர். இருதரப்பினரிடையேயும் நடைபெறும் மோதலில் தினசரி 10க்கும் அதிகமானோர் உயிரிழக்கிறார்கள்.

2011இல் துனிசிய புரட்சியின் தாக்

**இஸ்லாமிய மதத்தில் ஷியா பிரிவைச் சேர்ந்தவர்களாக அலாவிகள் தம்மைக் கூறிக்கொள்கின்றனர். பிற முஸ்லிம்கள் அலாவிகளை இஸ்லாமியராகக் கருதுவதில்லை**

கத்தால் அராபிய நாடுகளில் எழுந்துள்ள போராட்டங்களின் தொடர்ச்சியாகவே 2011 ஜனவரி முதல் சிரியாவிலும் போராட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.

சிரியாவில் 1962ஆம் ஆண்டு முதல் நெருக்கடிநிலை அமலில் உள்ளது. இது, குடிமக்களுக்கான அரசியலமைப்புப் பாதுகாப்புகளை இடைநிறுத்தம் செய்துள்ளது. முப்பதாண்டுகள் ஆட்சியில் இருந்த ஹபெஸ் அல்-அசாத்துக்குப் பிறகு அவரது புதல்வர் பஷார் அல்-அசாத் கடந்த பத்தாண்டுகளாக ஆண்டுவருகிறார்.

மார்ச் 18, 19 நாள்களில் நிகழ்ந்த போராட்டங்கள் பல பத்தாண்டுகளில் நடந்தேறியதில்லை எனவும், சிரியாவின் அரசு, போராடும் மக்களுக்கு எதிராக வன்முறையால் பதிலடி கொடுத்திருக்கிறது என்றும் செய்திகள் கூறுகின்றன.

சிரியா அல்லது சிரிய அரபுக் குடியரசு மத்திய கிழக்கில் அமைந்த ஒரு நாடு. இது, மேற்கில் லெபனானையும், தென்மேற்கில் இஸ்ரேலையும், ஜோர்டானையும், கிழக்கில் ஈராக்கையும், வடக்கே துருக்கியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. நவீன சிரியா 1936இல் பிரான்சிடமிருந்து மக்கள் ஆணைமூலம் விடுதலை பெற்றது. அதன் வரலாறு கி. மு. நான்காம் நூற்றாண்டுக்கு முன்புவரை அடையாளம் காணப்படக்கூடியது. இதன் தலைநகர் டமாஸ்கஸ் உலகின் பழைய நகரங்களில் ஒன்றாகும்.


சிரியாவின் மக்கள் தொகையில் பெரும்பான்மையினர் அரபு மொழி பேசும் ஸன்னி முஸ்லிம்கள். மேலும், 16 வீதம் ஏனைய முஸ்லிம் குழுக்களையும், 10 வீதம் கிறிஸ்தவர்களையும் கொண்டுள்ளது. 1963இலிருந்து பாத் கட்சி நாட்டை ஆண்டு வருகின்றது. 1970முதல், நாட்டின் தலைவர் அசாத் குடும்பத்தை சேர்ந்தவராக காணப்படுகிறார்.

வரலாற்றில் சிரியா, இன்றைய லெபனான், இஸ்ரேல், பாலஸ்தீனம் போன்றவற்றையும் ஜோர்டானின் பகுதிகளையும் சிரியாவின் வடகிழக்கு மாநிலமான அல்-ஜசீரா பகுதியையும் நவீன சிரியாவின் ஏனைய பகுதிகளையும் கொண்டதாகக் கருதப்பட்டது. 1967இல் இஸ்ரேலுடன் ஏற்பட்ட போருக்குப் பின்னர் சர்ச்சைக்குரிய கோகான் மேடுகளை இஸ்ரேல் கைப்பற்றித் தன்வசமாக்கிக்கொண்ட பின்னர், துருக்கியுடன் அடேய் மாநிலம் தொடர்பான சர்ச்சை இப்போது முக்கியத்துவம் குன்றியுள்ளது.

சிரியாவின் தலைநகர் டமாஸ்கசில் இருந்து சுமார் நூறு கி. மீ. தூரத்தில் இருக்கிறது டேரா. விவசாயம் புரியும் மூன்று லட்சம் மக்கள் வாழும் இக்குடியிருப்புகள் ஜோர்டான் எல்லையோரமாக உள்ளன. ஜோர்டான் எல்லையைக் கடந்து வருபவர்கள், டேராவில் இருந்துதான் டமாஸ்கஸ் செல்லவேண்டும். தலைநகரை இணைக்கும் சாலை டேராவில் இருந்துதான் ஆரம்பிக்கின்றது. இங்குதான் 2011, மார்ச் 15முதல் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகின. துனிசியா, எகிப்திய புரட்சிகளால் உந்தப்பட்ட சிலரின் வேலையாக இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. அரச எதிர்ப்பு சுலோகம் எழுதிய மாணவர்கள் சிலரைப் பொலீஸ் கைதுசெய்து கொண்டுசென்றது. இந் நடவடிக்கை ஆர்ப்பாட்டத்தை அதிகரிக்கச்செய்தது. விவசாயிகளின் பிரச்னைக்குச் செவிசாய்க்காமல், அரசு அடக்குமுறையை கையாண்டமை ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டது.

டேரா விவசாயிகள், பிரதேச ஆளுநர் பைசல் கல்தூமுக்கு எதிராக

சிரிய பாலைவனப்பகுதியில் கி. பி. முதலாம், இரண்டாம் நூற்றாண்டு கால புராதன சிதைவுகள்



**ஷியா முஸ்லிம்களின் நாடான ஈரான், சிரியாவில் ஆட்சி மாற்றத்தை எதிர்க்கவேசெய்யும்**

கிளர்ந்தெழுந்தனர். டேரா நகரையும், மாகாணத்தையும் 2006ஆம் ஆண்டிலிருந்து ஆட்சிசெய்துவந்த ஆளுநர் ஊழல்களுக்கு பெயர்போனவர். விவசாய நிலங்களை விற்பது, பங்கிடுவது சம்பந்தமான முறைகேடுகள் விவசாயிகளை அதிருப்திக்கு ஆளாக்கின. டேரா பிரதேசத்தில் நிலவும் தண்ணீர் தட்டுப்பாடும் பிரச்னைக்கு மூலகாரணம். டேராவாசிகளே தண்ணீருக்கு அல்லல்படும் நேரத்தில், நாளுக்கு நாள் இங்கே குடியேறிவரும் வெளியூர்வாசிகளும் பிரச்னையை தீவிரப்படுத்துகிறார்கள். ஒரு காலத்தில் தானியக் களஞ்சியமாக இருந்து, இன்று வரண்ட பாலைவனமாக மாறியுள்ள சிரியாவின் வட கிழக்குப் பகுதியைச் சேர்ந்த மக்களே அதிக அளவில் இங்கு வந்து குடியேறினர். ஈராக் அகதிகளும் பெருமளவில் தஞ்சமடைந்திருந்தனர்.

வரட்சி, தண்ணீர்ப் பற்றாக்குறை, நலிவடையும் விவசாய உற்பத்தி, உணவுப் பொருள்களின் விலையேற்றம் என ஒன்றுகொன்று தொடர்பான பிரச்னைகள் சிரியாவில் நீண்டகாலமாகவே அதிகரித்துவருகின்றன. டேரா பிரதேசத்தில் புதிய விவசாய நிலங்களை உருவாக்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது. அரசு அந்த நிலங்களைக் குறைந்த விலைக்கு விவசாயிகளுக்கு விற்கவேண்டும். ஐ. நா., மற்றும் சில மேற்கத்தைய நாடுகள் இந்த திட்டத்துக்கு ஆதரவளித்தன. திட்டத்தை நடைமுறைப்படுத்த நியமிக்கப்பட்ட ஆளுநர், தனது உறவினர்களின் பெயரில் ஒரு தனியார் நிறுவனம் அமைத்துக்கொண்டார். அரசு நிதியைக் கையாடிய அந் நிறுவனம், விவசாயிகளை நட்டாற்றில்விட்டது. விவசாயிகள் தாமாகவே புதிய கிணறுகளைத் தோண்டுவதற்கு ஆளுநர் அநுமதி வழங்கவில்லை. இந்த நேரத்தில்தான் துனிசிய புரட்சி நடைபெற்றது.

டேராவில் நிலவும் இன்னொரு பிரச்னையும் நிலைமையைச் சிக்கலாக்கியது. இங்கே ஸன்னி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். டமாஸ்கஸில் ஆளும் வர்க்கத்தினர் அலாவி, ஷியா பிரிவைச் சேர்ந்தவர்கள். அலாவிகளின் ஆட்சியில் ஸன்னி முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுவதாகக் குற்றச்சாட்டு பல ஆண்டுகளாகவே எழுப்பப்பட்டுவருகிறது. அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் "உண்மையான முஸ்லிம்கள் அரசாங்கத்தை நடத்த வேண்டும்!" என்ற கோஷம் எழுப்பப்பட்டது.

'முஸ்லிம் சகோதரத்துவம்' என்ற ஆயுதமேந்திய இயக்கம் பல ஆண்டுகளுக்கு முன்பு, சிரியாவில் அரசைக் கவிழ்க்க முயன்றது. எழுபதுகளில், எண்பதுகளில் முஸ்லிம் சகோதரத்துவ செயற்பாட்டாளர்கள் நாடு முழுவதும் தீவிரமாக இயங்கிக்கொண்டிருந்தார்கள். வட சிரிய நகரமான ஹாமா, நீண்ட காலமாக இஸ்லாமிய கிளர்ச்சியின் தலைமையகமாக திகழ்ந்தது. இன்றைய சிரிய அதிபர் பஷாரின் தந்தை அசாத், முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பை இரும்புக்கரம்கொண்டு ஒடுக்கினார். 1982ஆம் ஆண்டு, ஹாமா நகரம் விமானக் குண்டுவீச்சுகளால் தரைமட்டமாக்கப்பட்டது. மொத்தம் நாற்பதாயிரம் மக்கள், சிரிய பாதுகாப்புப் படையினரால் கொன்றுகுவிக்கப்பட்டனர்.

அதிபர் பஷார் அல்-அசாத் உள்பட, அரசின் முக்கிய புள்ளிகள் சிறுபான்மை அலாவி சமூகத்தைச் சேர்ந்தவர்கள். சிரியாவில் ஒரு மில்லியன் அலாவிகள் (மொத்த மக்கள் தொகையில் 12 வீதம்) வாழ்கின்றனர். இஸ்லாமிய மதத்தில் ஷியா பிரிவைச் சேர்ந்தவர்களாக அலாவிகள் தம்மைக் கூறிக்கொள்கின்றனர். பிற முஸ்லிம்கள் அலாவிகளை இஸ்லாமியர்ாகக் கருதுவதில்லை. அலாவிகள் இஸ்லாமியரின் மதக் கடமைகளை பின்பற்றுவதில்லை. ஷரியா சட்டத்தை ஏற்றுக்கொள்வதில்லை.

அலாவிகளின் வழிபாட்டு முறைகள், மதச் சடங்குகள், புனித நூல் ஆகியன வித்தியாசமானவை. அவர்கள் கிறிஸ்தவர்களின் பண்டிகை நாள்களையும் கொண்டாடுகின்றனர். கிறிஸ்தவப் புனிதர்களையும் போற்றுகின்றனர். இஸ்லாத்துக்கும், கிறிஸ்தவத்துக்கும் இடையிலான மதத்தைச் சேர்ந்தவர்கள்போலக் காணப்படுகினறனர்.

பல நூறாண்டுகளாக, சிரியாவில் அலாவிகள் ஒதுக்கிவைக்கப்பட்ட சமூகமாக வாழ்ந்துவந்தனர். அதாவது, அசாத் ஆட்சிக் காலத்தில்தான், பொருளாதாரத்தில் பின்தங்கியிருந்த, வறுமைக்குள் வாடிய அலாவி சமூகத்தில் மாற்றம் ஏற்பட்டது. இராணுவ சதிப் புரட்சிமூலம் அசாத் ஆட்சியைப் பிடித்தார். அசாத் ஆட்சியில்தான் அலாவிகள் உயர் பதவிகளைப்பெற்று பணக்காரரானார்கள். சிரியாவில் தற்போதைய அரசு கவிழுமானால், பெரும்பான்மை ஸன்னி முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்களே ஆட்சியைப் பிடிப்பார்கள். அவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றினால், அலாவி சமூகத்தினரைப் பழிவாங்குவதற்காக இனப்படுகொலையை கட்டவிழ்த்துவிடுவதற்கான எல்லாச் சாத்தியக்கூறுகளும் உள்ளன.

இந்தப் பின்னணியில் பார்க்கும் போது, அலாவிகள் நடத்தும் அரசின் வன்முறையை நிறுத்துவதுடன், இந்த அமைதி ஸன்னி பிரிவினரின் வெற்றியாக அமைந்து, அவர்கள் பழிவாங்கும் நடவடிக்கைகளில் இறங்கிவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டிய அவசியமும் இருக்கிறது. பேச்சுவார்த்தையின் மூலம் அமைதி பிறந்தால்தான் இது சாத்தியமாகும்.

ஆளும் வர்க்கத்தினர் கிளர்ச்சியாளர்களை அழைத்துப் பேசவேண்டும். இதை மதப்பிரிவு சார்ந்த மோதலாக மட்டும் பார்க்காமல், உள்நாட்டில் நிலவும் பொருளாதாரச் சிக்கல் உள்பட, பல்வேறு பிரச்னைகளின் அடிப்படையிலும் இதை அணுகவேண்டும். அப்போதுதான் பிரச்னை தணியும்; பலிகள் குறையும்.

சிரியாவில் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர அரபு லீக் எடுத்த முயற்சிகள் பயன்தரவில்லை. சிரியாவில் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவரச்செய்யும் கோபி அனானின் ஆறு அம்ச திட்டத்தை சிரியா ஏற்றுக்கொண்டுள்ளதாக ஐ. நா. மற்றும் அரபு லீக்கின் தூதராக செயல்ப

டும் கோபி அனானின் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார்.

ஐ. நா. கண்காணிப்பின்கீழ் போர் நிறுத்தம் செய்வது; எதிர்கட்சியினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் நகரங்களிலிருந்து அரச துருப்புக்களை திரும்பப் பெறுவது; மனிதநேயப் பணிகளை மேம்படுத்துவது போன்றவை கோபி அனானின் திட்டத்தில் அடக்கம்.

ஐ. நா. வின் முன்னாள் செயலாளர் நாயகம் கோபி அனானின் திட்டத்துக்கு சீனாவும், ரஷ்யாவும் ஆதரவு அளித்துள்ளமையால் இந்த திட்டத்தை சிரிய அரசு ஏற்கும் நிலை ஏற்பட்டது என்று செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

இவற்றைச் சிரிய அரசு ஏற்றுக் கொண்டதாகச் சொல்லப்பட்டாலும் இன்னமும் எதுவும் பகிரங்கமாக அறிவிக்கப்படவில்லை. தெருக்களில் வன்முறையும் குறையவில்லை.

கடந்த ஓராண்டாகச் சிரியாவில் பெரும் வன்முறை நடந்துவரும்போதும் இதை நிறுத்த உலக நாடுகள், குறிப்பாக மேற்கு நாடுகள், பெரிதாக ஒன்றும் செய்துவிடவில்லை. சிரியா மீது பொருளாதார தடை விதிப்பது குறித்து மட்டுமே சில நாடுகள் பேசி வருகின்றன. லிபியாவில் நடந்ததைப் போல, நேட்டோ படைகளின் விமானக் குண்டுவீச்சு நடத்துவது குறித்து எவரும் பேசவில்லை.

சிரியாமீது இராணுவ நடவடிக்கை எடுத்தால், அது அயல்நாடான இஸ்ரேலை பாதிக்கும் என்ற அச்சமே 'சர்வதேச சமூகம்' சிரிய பிரச்னையில் ஈடுபட தயங்குவதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. கடந்த இருபது ஆண்டுகளாக போரில் ஈடுபடாத சிரியா, ஈரானிடமிருந்து நவீன ஆயுதங்களை வாங்கிக் குவித்துள்ளது. சிரிய அரசு ஆட்டம் கண்டால், இஸ்ரேல் மீது அது தாக்குதல் தொடுக்கும் என்றும் அதன் விளைவாக அந்தப் பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகளும் போருக்குள் இழுத்துவிடப்படும் என்றும் சொல்லப்படுகிறது. சிரியாவுடன் நட்புப் பாராட்டும் ஈரான் உதவிக்கு வரலாம். அதேநேரம், லெபனானின் கெரில்லா அமைப்பான இஸ்புல்லாவும், பாலஸ்தீன ஹமாசும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தலாம். இந்த இயக்கங்களுக்கு சிரியா ஆதரவு வழங்கிவருகிறது. மேலும், ஷியா முஸ்லிம்களின் நாடான ஈரான், சிரியாவில் ஆட்சி மாற்றத்தை எதிர்க்கவே செய்யும்.

சிரியாவில் நிலவிவரும் உள்நாட்டுப் பிரச்னைக்கு அமைதி வழியில் தீர்வு காணவேண்டும் என்று இந்தியா வழக்கம்போல விருப்பம் தெரிவித்துள்ளது. அதனடிப்படையிலேயே ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் அரபு லீக்கின் ஆதரவுடன் கொண்டுவரப்பட்ட சிரியாதொடர்பான தீர்மானத்துக்கு ஆதரவளித்ததாகவும் இந்தியா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐ. நா. வுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி ஹர்தீப் சிங் பூரி, சிரியா குறித்து விரிவான அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். "அமைதி முயற்சிகள் சிரியா தலைமையிலேயே எடுக்கப்படவேண்டும். தங்கள் நாட்டு தலைமை குறித்து சிரிய மக்களே முடிவெடுக்கவேண்டும். ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை நடைபெற அனைத்து எதிர்க்கட்சிகளும் அமைதியான முறையில் அரசுடன் ஒத்துழைக்கவேண்டும். இது அமைதி நிலவுவதற்கான புதிய சூழ்நிலையை உருவாக்குவதுடன், அரசியல் ரீதியான முயற்சிகளுக்கும் உதவும். சிரியாவின் தலைமையினால் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த அரசியல் சீர்திருத்தங்களை அடைய அரசியல் ரீதியான இம் முயற்சிகள் உதவும். அனைத்து தரப்பினரும் விரும்பும்படியான தேவையான மாற்றங்களை உருவாக்கவும் இது உதவும்'' என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

முன்னதாக, ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் சிரிய அரசும், ஆயுதமேந்திய புரட்சி குழுக்களும் வன்முறையை நிறுத்தவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், ரஷ்யாவும், சீனாவும் தங்களது 'வீட்டோ' அதிகாரத்தை பயன்படுத்தி சிரியாவுக்கு எதிரான தீர்மானத்தை தோற்கடித்தன. இதற்கு அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், மொரோக்கோ உள்ளிட்ட நாடுகள் வன்மையாகக் கண்டனம் தெரிவித்துள்ளன.

அண்மையில் நூறுக்கும் அதிகமானவர்கள் அதிலும் குறிப்பாக, பாதியளவு எண்ணிக்கை சிறார்கள் கொல்லப்பட்டுள்ளதையடுத்து, ஐ. நா. இந்த விவகாரத்தில் மேலும் அதிக கவனம் கொண்டுள்ளது. கோபி அனான், சிரிய தலைநகர் டமாஸ்கஸுக்கு சென்றார். சிரியாவில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளில் ஒரு நெருக்கடியான நேரம் வந்துள்ளது என்று அவர் கூறியிருக்கிறார்.

தன்னால் முன்வைக்கப்பட்டுள்ள ஆறு அம்ச தீர்வுத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும் என கோபி அனான் வலியுறுத்தியுள்ளார். சிரிய நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கான எண்ணத்தை அரசு மட்டுமல்ல, ஆயுதம் ஏந்தியுள்ள அனைவரும் வெளிப்படுத்தவேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.


ஹௌலா படுகொலைகள் குறித்து ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜேய் லாவராவும் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.

எனின், இதற்குத் தீர்வு என்ன?

உலக நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையும் எவ்வளவுதான் குரல் எழுப்பினாலும் சிரியாவின் வன்முறைகள் அவ்வளவு விரைவில் முடிவுக்கு வந்துவிடாது என்பதே கவலைதரும் யதார்த்தம். ஏனெனில், சிரியாவின் உள்நாட்டு பிரச்னைகள் ஆழமானவை. ஆழமான மத உணர்வுகளால் தூண்டப்படுபவை. மத துவேஷமும் அதிகார பசியும் வறுமையும் பிடிவாதமும் சேர்ந்து சிரியாவை ஓயாத போர்க்களமாக ஆக்கியுள்ளன.

சிரியாவின் உள்நாட்டுப் பிரச்னைகள் ஆழமானவை. அங்குள்ள ஷியா, ஸன்னி ஆகிய இரு பிரிவினரிடையே உள்ள ஆழமான வெறுப்பும் முஸ்லிம் நாடுகளின் அரசியலும் இந்த மோதல்களுக்குப் பின்னணியில் உள்ளன. நாட்டில் நிலவும் வறுமை, சமத்துவமின்மை ஆகியவையும் இந்தப் பிரச்னையை விசிறிவிடுகின்றன. இந்நிலையில் உடனடியான தீர்வு எட்டப்படுவது சாத்தியமல்ல. ஆனால், உடனடியாக வன்முறையை நிறுத்திவிட்டு, தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட அரசு முன்வரலாம். சிரிய ஆட்சியாளர்கள் இதைச் செய்வார்களா என்பதுதான் இப்போது கேள்வி. செய்யாவிடின் அவர்களைச் செய்யவைக்க ஐ. நா. வும் அமைதியை விரும்பும் உலக நாடுகளும் என்ன செய்யப்போகின்றன என்பது இதைவிடப் பெரிய கேள்வி.

சிறிதும் நெகிழ்வுத் தன்மை இல்லாமல் மத அடையாளங்களை வலுவாகப் பற்றிக்கொண்டிருப்பதுதான் உலகில் நடக்கும் பலவிதமான மோதல்களுக்கும் காரணம். வேறுபட்ட மதங்களுக்கிடையில் மட்டுமன்றி, ஒரே மதத்தின் உள் பிரிவுகள் சார்ந்த மோதல்களும் இத்தகையவையே என்பதை சிரியா காட்டுகிறது. சொந்த நம்பிக்கையின்மீதான பற்று, பிறரது நம்பிக்கைமீதான மரியாதையுடன் இணைந்து இருப்பதே மோதல்களைக் குறைக்கும் வழி. இந்த இணக்கத்தை உருவாக்குவது எப்படி என்பதுதான் அமைதியை விரும்பும் மனிதாபிமானிகள் முன்னுள்ள சவால். ■


Nalli
NEXT
NN0019




கலாக்ஷேத்ரா

## சோலையில் புயல்

# நல்லதோர் வீணை செய்தே...

**பாரம்பரியத்தையும் பேணி, காலத்தின் பரிணாம வளர்ச்சிக்கும் உழைத்த லீலா சாம்சன், சுயநலம் கருதி எழுந்த விரோதங்களில் இயக்குநர் பதவியிலிருந்து விலகியிருக்கிறார்**

தாமரை



இந்திய கவின்கலைகளின் மையம் என்று சென்னையைச் சற்றே மிகைப்படுத்திச் சொல்லிவிடலாம். அந்த அளவுக்கு இங்கே செவ்வியல் இசை, மற்றும் நாட்டிய மரபுகள் இன்னமும் தழைத்தோங்குகின்றன. 'கலாக்ஷேத்ரா' இங்கு, இக் கலைகளின் ஒரு பெரும் சோலை. இச் சோலையில் இப்போது புயல் வீசுகிறது. லீலா சாம்சன் கலாக்ஷேத்திரத்தின் இயக்குநர் பதவியிலிருந்து விலகியிருக்கிறார்.

கலாக்ஷேத்திர நிர்வாகக் குழுவின் தலைவர் பொறுப்பை வகித்த முன்னாள் நீதிபதி எஸ். மோகன், 2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் பதவிவிலகினார். பின்னர், மேற்கு வங்க முன்னாள் முதல்வர் கோபால்கிருஷ்ண காந்தி, 2012ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அத் தலைமைப் பதவியை ஏற்றார். சென்ற ஏப்ரல் மாதம் 10ஆம் தேதி அவர் நடத்திய கூட்டத்தில் லீலா சாம்சன்மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள் விவாதிக்கப்பட்டன.

லீலாவுக்கு அறுபத்தொரு வயது பூர்த்தியாகவிருப்பதால் அரசாங்க விதிமுறைப்படி அவர் ஓய்வுபெறவேண்டும் என்று கூறப்பட்டது. அங்கு மேற்கொள்ளப்பட்ட முக்கியமான கட்டுமானப் பணிகளுக்கு அரசாங்க முறைப்படி கேள்விப்பத்திரங்கள் கோரவில்லை என்றும் குற்றம்சாட்டப்பட்டது. ருக்மிணி தேவி வடிவமைத்த நாட்டிய நாடகங்களை ஆவணப் படங்களாக்க இயக்குநர் மது அம்பட்டை லீலா நியமித்திருந்தார். இந்த முடிவும் கேள்விக்கு உள்படுத்தப்பட்டது. இந்த



## ருக்மிணி அருண்டேலின் அபிமான மாணவியரில் ஒருவரான லீலா சாம்சன் 2005இல் இயக்குநராக நியமிக்கப்பட்டார்

நாட்டிய நாடகங்களை ஆவணப் படங்களாக எடுக்கச் சிறப்பான திறமை எதுவும் தேவையில்லை என்றும் அம்பட் போன்ற ஒருவரை இதற்காக நியமித்தது அநாவசியம் என்றும் அரசாங்கத்தின் பொதுக் கணக்குத்துறை அலுவலகம் கருத்துத் தெரிவித்திருந்தது. இதுவும் அந்தக் கூட்டத்தில் முக்கியத்துடன் விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தில் பலரும் தனக்கு எதிராகப் பேசியதைக் கண்ட லீலா சாம்சன், அதற்கு இரண்டு நாள்களுக்குப் பின்னர் ஏப்ரல் 12ஆம் தேதி, தன் பதவியை இராஜினாமா செய்தார்.

1930இல் கலாக்ஷேத்திரத்தை நிறுவிய ருக்மிணி தேவி அருண்டேலின் அபிமான மாணவியரில் ஒருவரான லீலா சாம்சன் 2005இல் அதன் இயக்குநராக நியமிக்கப்பட்டார். பதவியேற்ற நாளிலிருந்தே அமைப்பின் உள்ளேயும் வெளியிலிருந்தும் பலவிதமான எதிர்ப்புகள் அவருக்கு இருந்துவந்தன. இந்திய கடற்படையின் முன்னாள் வைஸ் அட்மிரல் ஏபிரகாம் சாம்சனின் மகளான லீலா இதையெல்லாம் பொருள்படுத்தாமல் கலாக்ஷேத்திரத்தின் பணிகளில் ஈடுபட்டார். பழைமையையும், பாரம்பரியத்தையும் குன்றவிடாமல், கலாக்ஷேத்திரம் காலத்துக்கேற்ற பரிணாம வளர்ச்சியும், வளமும்பெற அவர் உழைத்தார் என்று பரவலாகக் கூறப்படுகிறது. பல துறைக் கலைஞர்கள் கலாக்ஷேத்திரத்தில் பணிபுரிய அவர் வழிவகுத்தார். மாணவ மாணவியர் வெளியில் சென்று கலை நிகழ்ச்சிகள் வழங்க ஊக்கம் அளித்தார். பிற கலை நிறுவனங்களுடனான உறவைச் செழுமைப்படுத்தினார். அவரது பதவிக் காலத்தில் நாடெங்குமுள்ள பல கலைஞர்களின் நிகழ்ச்சிகள் கலாக்ஷேத்ரத்தில் நடந்தன.

லீலாவின் வயதைப் பிரச்னைக்குரியதாக சொல்பவர்கள், அவர் நியமிக்கப்பட்டபோது வயதுவரம்பு ஏதும் விதிக்கப்படவில்லை என்பதை மறந்துவிடுகிறார்கள். தவிர, அரசாங்கப் பணிக்குப் பொருந்தும் அளவுகோல்களைக் கலைத்துறைக்கும் முற்றிலும் கடைப்பிடித்துவிடமுடியாது என்பதையும் வசதியாக மறந்துவிட்டார்கள். அவரது பதவியைப்

**ருக்மிணி அருண்டேலைத் துரத்திய கேள்வி, இன்று லீலாவையும் துரத்துகிறது**

பொறுத்தவரை இந்த விதியைத் தளர்த்த வேண்டும் என்று அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது என்பதையும் எதிர்ப்பாளர்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. அவர் பதவியில் நீடிப்பதை வயதினடிப்படையில் எதிர்த்து கலாக்ஷேத்திரத்தின் முன்னாள் மாணவர் ஒருவர் தாக்கல் செய்த பொதுநல வழக்கை நீதிமன்றம் ரத்து செய்துவிட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கேள்விப்பத்திரங்கள், ஆவணப் படங்கள் முதலான விடயங்களில் லீலா தனிப்பட்ட முறையில் எந்த முடிவையும் எடுக்கவில்லை என்பதையும், நிர்வாகக் குழுவே அவற்றை முடிவுசெய்தது என்பதையும் லீலாவை ஆதரிப்பவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

கலை விமர்சகரும் சிரேஷ்ட பத்திரிகையாளருமான சதானந் மேனன் இந்த விவகாரம் குறித்து 'இந்து' நாளிதழில் விரிவாக ஒரு கட்டுரை எழுதினார். லீலா சாம்சன் எதனால் பதவி விலகவேண்டிவந்தது என்பது முக்கியமல்ல என்கிறார் அவர். 77 ஆண்டுகளான ஓர் அமைப்பு சீரழிவின் விளிம்பில் இருந்தது என்று கூறும் மேனன், அதை மீட்டெடுத்த ஒரு கலைஞரை நடத்தும் முறை இதுவல்ல என்று அழுத்தமாகக் குறிப்பிடுகிறார். ஏழு ஆண்டுகாலம் கடினமாக உழைத்து, நிர்வாக ரீதியிலும் கலை சார்ந்தும் பல சாதனைகளைப் புரிந்திருக்கும் லீலா சாம்சன், பதவியிலிருந்து கௌரவமாக விலகுவதற்காவது நிர்வாகக் குழு ஏற்பாடு செய்திருக்கவேண்டும் என்கிறார்.

**'நிர்வாக ரீதியிலும் கலை சார்ந்தும் பல சாதனைகளைப் புரிந்திருக்கும் லீலா சாம்சன், பதவியிலிருந்து கௌரவமாக விலகுவதற்காவது நிர்வாகக் குழு ஏற்பாடு செய்திருக்கவேண்டும்'**

"இச் செய்தியைக் கேட்டு இந்தியாவிலும் சென்னையிலும் பல கலைஞர்கள் அதிர்ச்சியில் உறைந்துபோனோம். கலாக்ஷேத்திரத்துக்கு லீலாவின் சேவை முன்னரையும்விட இப்போது அதிகமாக தேவை'' என்று 'நர்த்தகி.கொம்' என்னும் இணையதளத்தில் எழுதிய நடனக் கலைஞர் அனிதா ரத்னம், வாசகர் கருத்துக்களையும் கேட்டார். உலகெங்கிலும் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் லீலா சாம்சனுக்கு ஆதரவாக, இந்தத் தளம் வெளியிட்ட மனுவில் கையெழுத்திட்டார்கள். லீலா தன் முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்றும் அவர்கள் கோரியிருக்கிறார்கள்.

அலர்மேல் வள்ளி, மாளவிகா சருக்கைபோன்ற நடனக் கலைஞர்களுடன் லால்குடி ஜெயராமன்போன்ற பெரும் இசைக் கலைஞர்களும், ரி. எம். கிருஷ்ணாபோன்ற இளைய தலைமுறையினரும் லீலா பதவியில் நீடிக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

லீலா சாம்சன் பதவி விலகியதையடுத்து ஏற்பட்ட அதிர்ச்சி அலைகளின் தொடர்ச்சியாக மே 11ஆம் தேதி கலாக்ஷேத்திரத்தின் அவசர கூட்டம் ஒன்று நடந்தது. பெரும்பாலான உறுப்பினர்கள் நடந்தவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். கலை அமைப்புக்களுக்கு அரசாங்கத்தின் நிர்வாக எந்திரம் கூறும் அளவுகோல்கள் பொருந்தாது என்ற அடிப்படையில், வயது எல்லைபோன்ற விதிகளை அங்கு புகுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். நேர்மையுடன் சீரிய முறையில் பணியாற்றி, கலாக்ஷேத்திரத்தின் வளர்ச்சிக்கு உழைத்த ஒரு கலை

ஞர் இயக்குநர் பதவியில் நீடிப்பது மிக அவசியம் என்று வற்புறுத்தினார்கள். 'இந்து' பத்திரிகைக் குடும்பத்தவரும், சென்னை மியூசிக் அக்கடெமியின் தலைவருமான என். முரளி, தொழிலதிபர் ஏ. சி. முத்தையா என்ற பலரும் லீலா மீண்டும் பதவியில் அமர்த்தப்படவேண்டும் என்று கோரிக்கை எழுப்பினர். அன்று அங்கு இயற்றப்பட்ட தீர்மானம் அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கலைஞர்கள் மத்தியிலும் கலை ஆர்வலர்கள் மத்தியிலும் லீலாவுக்கு இத்துணை ஆதரவு இருப்பதை வைத்தே, அவர் கலைசார்ந்து சிறப்பாக இயங்கியிருக்கிறார் என்ற முடிவுக்கு வரலாம். அவரை எதிர்ப்பவர்களோ அவரது வயது, கேள்விப் பத்திரங்கள் விடப்பட்ட முறைபோன்ற, நிர்வாக ரீதியான காரணங்களைச் சுட்டிக்காட்டுகிறார்கள். கலாக்ஷேத்திரா அடிப்படையில் கலை சார்ந்த, கலைக்காகவே உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பு. அதில் கலைசார்ந்த பணிகள்தான் முக்கியத்துவம் பெறவேண்டும். லீலா அவ்விடயத்தில் சிறப்பாகவே செயல்பட்டிருக்கிறார். மேனன் சொல்வதுபோல, படுத்த படுக்கையில் இருந்த அமைப்புக்குப் புத்துயிர் கொடுத்து கம்பீரமாக எழுப்பி நிறுத்தினார். நிர்வாக ரீதியான புகார்களின் அடிப்படையில் அவரை வெளியேற்றுவது, கலைஞர்களை மன வேதனைக்கு உள்ளாக்கும் செயல் என்பதில் சந்தேகமில்லை.


நிர்வாக ரீதியான இந்தப் பிரச்னை ருக்மிணி தேவி உயிருடன் இருந்தபோதே இருந்தது. அவர் நிர்வாகக் குளறுபடிகளால் மிகவும் நொந்துபோயிருந்தார். புகழ்பெற்ற நடனமணி சந்திரலேகா அவரைப் பார்க்கச் சென்றிருந்தபோது, 81 வயதான ருக்மிணி அருண்டேல் கோப்புகளுடன் போராடிக் கொண்டிருப்பதைக் கண்டு வருத்தப்பட்டிருக்கிறார். நீங்கள் ஏன் இதையெல்லாம் செய்கிறீர்கள்? என்று ஆதங்கப்பட்டிருக்கிறார். 'நான் வேறு எதைச்செய்ய?' என்று ருக்மிணி தேவி வருத்தப்பட்டிருக்கிறார். 'இதை வேறு யாராவது செய்யட்டுமே. நடனம் குறித்த உங்கள் லட்சியப் பார்வைதானே நீங்கள் உலகுக்கு அளிக்கவேண்டிய கொடை?' என்று 25 வயது சந்திரலேகா கேட்டார். 'அந்த நோக்கு யாருக்கம்மா வேண்டும்' என்று ருக்மிணி அருண்டேல் விரக்தியோடு சொன்னாராம். இந்தச் சம்பவத்தை வர்ணிக்கும் சதானந் மேனன், இன்று அதே கேள்வி லீலாவைத் துரத்துகிறது என்கிறார்.

லீலாவுக்கு எதிரான உணர்வுகள் அமைப்புக்குள் இருப்பதற்குக் காரணம் போட்டியும் பொறாமையும்தான் என்று சிலர் குறிப்பிடுகிறார்கள். மறைமுகமான எதிர்ப்பு சக்திகள் பல முனைகளில் மும்முரமாக வேலை செய்துவந்தன என்கிறார்கள் அவர்கள். லீலா நியமிக்கப்பட்டதில் அதிருப்தி கொண்டவர்கள். அவரது செயல்பாடுகளில் குற்றம் கண்டவர்கள், அந்தப் பதவியின்மீது ஒரு கண் வைத்திருந்தவர்கள் என்ற பலரும் அதில் உண்டு என்று சொல்லப்படுகிறது. அங்கு பணியாற்றி ஓய்வுபெற்ற தோமஸ் என்ற சிரேஷ்ட கலைஞர் ஒருவர் லீலாபேரில் பல குற்றச்சாட்டுகளை அரசாங்கத்துக்குத் தொடர்ந்து அனுப்பிவந்தார். கலாக்ஷேத்ரா நிலத்தை வசப்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டுத் தோல்வி அடைந்த சிலரும் இதற்குப் பின்னால் இருப்பதாக சொல்லப்படுகிறது.

லீலாவின்மீது வேறு சில குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படுகின்றன. கிறிஸ்தவரான லீலா சாம்சன், தொடக்க காலம் தொட்டு இருந்துவரும் நடராஜர் மற்றும் இந்து தெய்வங்களின் திருவுருவங்களை சடுதியாகவே நீக்கியதாகவும் சிலர் கூறுகிறார்கள். கோவிலை மையமாகக்கொண்டு வளர்ந்த பரதநாட்டியத்தை இந்து மத நிகழ்ச்சியில் மாணவர்கள் ஆடக்கூடாது என்று அவர் தடைவிதித்ததாகவும் சொல்லப்படுகிறது. இத்தகைய குற்றச்சாட்டுக்கள் இருந்தாலும், லீலா சாம்சன் விலகியது குறித்து அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தவர்களில் பெரும்பாலானோர் இந்துக்கள். அது மட்டுமல்ல, லீலா இந்து மரபுக்கு விரோதமாக செயல்பட்டிருந்தால் அது இவர்களுக்கு ஏற்புடையதாக இருந்திருக்காது என்பதிலும் சந்தேகமில்லை.

இந்த மொத்த விடயத்தையுமே கலைக்கு எதிராக, நிர்வாக அஸ்திரத்தை உயர்த்திப் பிடிக்கும் முயற்சி என்று சொல்லலாம். ஆனால், இதற்குக் காரணம் நிர்வாகம் சார்ந்த அக்கறை அல்ல என்பது தெளிவு. நிர்வாக ரீதியான கவலைதான் லீலாவை எதிர்ப்பவர்களை வாட்டுகிறது என்றால் வயதைப் பற்றி அவர்கள் பேசவேண்டியதில்லை. அவரை வெளியேற்றவேண்டும் என்பதற்காகப் போராடவேண்டியதில்லை. கலாக்ஷேத்திரத்தின் நிர்வாக முடிவுகள் அதன் நிர்வாகக் குழுவின் மூலம்தான் எடுக்கப்படுகின்றன. தனிநபர் எவரையும் அதற்கு முழுப் பொறுப்பாக்கமுடியாது. லீலா எடுத்த முடிவுகள் தவறு என்றால் அதை நிர்வாகக் குழுவிலோ நீதிமன்றத்திலோ விசாரிக்கமுடியும். வயதையும் கூட்டு முடிவுகளையும் காரணம்காட்டி, அவரை விலகவைக்க முயற்சிசெய்வது வேறுவிதமான உள்நோக்கங்கள் இருப்பதையே காட்டுகிறது. ஆகவே, போட்டி உணர்வாலும், மதிப்புவாய்ந்த பெரிய நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பு தரும் அந்தஸ்தின் வசீகரத்தாலும் தூண்டப்பட்ட சிலர் லீலாவுக்கு எதிராகக் காய் நகர்த்துகிறார்கள் என்று லீலாவை ஆதரிப்புவர்கள் சிலர் சொல்வதைப் புறக்கணித்துவிட முடியாது. நிகழ்வுகளின் தன்மைகளும் கலைஞர்களின் எதிர்வினைகளும் இதைத் தெளிவாகவே உணர்த்துகின்றன.

ஒரு கலை அமைப்பின் ஆரோக்கியம் என்பது தனிநபர்கள் சார்ந்ததல்ல. அதே சமயத்தில் தனி நபர்கள் குறிவைத்துத் தாக்கப்படுவதையும் அத்தகைய முயற்சிகள் வெற்றிபெறுவதையும் அந்த நிறுவனத்தின் நெருக்கடிகளாகவே கொள்ளமுடியும். அந்தவகையில் பார்த்தால், லீலா சாம்சனின் விலகல் கலாக்ஷேத்திரத்தில் பரவியுள்ள நோய்க்கூறுகளையே காட்டுகிறது. இந்த நோயை விரைவில் குணப்படுத்துவதே கலைச் சூழலின்மீது அக்கறை கொண்டவர்களின் முதன்மையான முயற்சியாக இருக்கமுடியும். அந்த வகையில், லீலா மீண்டும் பதவியில் அமருவதற்கான முயற்சிகள் தீவிரமாக முன்னெடுக்கப்படவேவேண்டும். ■


22 கரட் அசல் தங்க, வைர நகைகள்
அழகு நிலா நகை மாடம்
Mohan Jewellery Mart
201, Rue du Saint-Denis
75010 Paris
Tel: 01 42 05 65 26
Fax: 01 42 05 65 79
Metro: La Chapell ou Gare du Nord
www.mohanjewellerymart.com
Email: mohanjm@hotmail.fr

# தரையில் கிடந்தவர்...

('தருமமிகு சென்னை'யில் ஓர் அப்பாவியான பள்ளியாசிரியை, வகுப்பறையிலேயே வைத்து ஒரு மாணவனால் கொலைசெய்யப்பட்டார். போன தலைமுறைகளில் மாணவர் – ஆசிரியர் உறவு நிலவிய விதம் இந்தச் சிறுகதையில் வெளிப்படுகிறது. 'இதில் நிறைய நிஜம், கொஞ்சம் கற்பனைஎன்கிறார் கதையை எழுதியுள்ள சுப்ர. பாலன்.)

"சொந்த பந்தம் எல்லாருந் தான் வந்துட்டாகளே, இன்னம் எதுக்குப் போட்டுவச்சிருக்காக...?'' என்று அலுத்துக்கொண்டார் ஒருவர். கோடை வெய்யில் சுட்டெரித்தது, கிராமங்களில் இப்படியெல்லாம் அதிக நேரம் 'போட்டு வைக்கிற' வழக்கமில்லை. 'அவர்' - யாராக இருந்தாலும் 'அது'வான பிறகு சட்டுப்புட்டென்று அப்புறப்படுத்தியாகவேண்டும். ஆகவேண்டிய காரியங்களைச் செய்தாக வேண்டும். பட்டணங்களில் செய்கிற மாதிரி ஐஸ்பெட்டிக்குள் வைத்து இரண்டு நாள், மூன்று நாள் என்று 'ஊறுகாய்' போடுகிற நாகரிகம் எல்லாம் இன்னும் புத்தன்பட்டி கிராமத்துக்கு வந்துவிடக்காணோம்.

தவிரவும், 'அது' கிளம்பிப் போன பிறகுதான் அக்கம் பக்கத்து வீடுகளில் சமையல் அடுப்பு மூட்டமுடியும். பட்டினி கிடக்கும் கோவில் சாமிக்கும் பூஜை நிவேதனம் எல்லாம் செய்யமுடியும். ஆளுக்கு ஆள் செல்போனை வைத்துக்கொண்டு 'துக்கம்' கொண்டாடுகிற காலத்திலும், இங்கே நிலைமை இதுதான். இப்போது கொஞ்சம் பயமாக இருக்கிறது; கட்டுப்பாடுகள் எல்லாம் காற்றோடு போய்விடுமோ?

கே. வி. முதலியார் தன்னுடைய கடைசி மூச்சை இழுத்து விட்டுவிட்டு நிம்மதியாய்க் கிடக்கிறார். பட்டம், பதவி, பெருமைகள் எல்லாவற்றையும் அந்த மூச்சுக்காற்றோடு அனுப்பிவிட்டமாதிரி, முதலியாரை வெறும் தரையில் கிடத்தியிருக்கிறார்கள்.

நான்கைந்து நாட்களாகவே நடந்த ஜீவ மரணப் போராட்டம் என்பதால் வரவேண்டிய உறவுகள், நண்பர்கள் எல்லோரும் வந்து 'முகமுழி' பாக்கியம் பெற்றுவிட்டார்கள். இன்னும் யாருக்



காக கிடத்தி வைக்கவேணும்?

உயிர் பிரிகிற நேரம் வரையிலும் கூடக் கிழவரின் பார்வை இங்குமங்கும் அலைபாய்ந்துகொண்டிருந்தது. யாரையோ எதிர்பார்த்து, அவர் வரக்காணோமே என்று ஏங்குகிற அவசரத்திலேயே கண்கள் 'நிலைகுத்தி'ப் போயின.

"ஆச்சி கிட்டக் கேளுங்கப்பா. இப்படி ரொம்ப நேரம் கெடத்திப்போட ஆகாதுன்னு சொல்லுங்கப்பா..."

"அவுக கிட்ட யாரு பேசுவாக... நல்ல நாளிலேயே சீறி அலப்பறை பண்ணும். இப்போ இன்னும் மோசம்..."

"ஆமாம் பெரிசு! எல்லாரும் கலங்கிப்போயி இருக்காங்க. கெழவி மட்டும் குத்துக் கல்லாட்டம் உட்கார்ந்திருக்கு. ஒரு பொட்டுத் தண்ணி விடக்காணோம். மனசெல்லாம் அப்படி இறுகிப் போயிடுமோ?"

ஆளாளுக்குப் பேசிக்கொண்டார்கள். யாரோ ஒரு பெண் கிழவியிடம் போய் ஏதோ சொல்ல முயன்றபோது அவளை நெருப்பாக நிமிர்ந்து பார்த்தாள். "எல்லாம் எனக்குத் தெரியும், போங்கடி... நான் சொன்ன பெறவு எல்லாத்தையும் ஆரம்பிக்கலா முன்னு சொல்லு."

காபியோ, தேநீரோ வந்தது. கூட்டத்தில் 'அது' கிடத்தியிருக்கும்போதே ஆளாளுக்கு வாங்கிப் பருகினார்கள். சிலர் கொஞ்சம் மரியாதையாக, அந்த இடத்தைவிட்டு விலகிப் போய்த் தொண்டையை நனைத்துக்கொண்டார்கள்.

பூமாலைகள் ஒன்றன்மேல் ஒன்றாய் வந்து விழுவதை எடுத்து அப்புறப்படுத்தினார்கள். இருபது வருஷங்களுக்கு மேலாகிவிட்டன, முதலியார் சர்க்கார் வேலையிலிருந்து ஓய்வுபெற்று வந்து. இன்னும் அவர்மீதான மரியாதை குறையவில்லை என்பதற்கு இந்த மாலைக

**வரவேண்டிய உறவுகள், நண்பர்கள் எல்லோரும் வந்து 'முகமுழி' பாக்கியம் பெற்றுவிட்டார்கள். இன்னும் யாருக்காக கிடத்தி வைக்கவேணும்?**

**உயிர் பிரிகிற நேரம் வரையிலும்கூடக் கிழவரின் பார்வை இங்குமங்கும் அலைபாய்ந்து கொண்டிருந்தது**

ளும் ஓர் அடையாளம்.

கொஞ்சமும் பொருத்தமில்லாமல் யாருடைய மொபைலோ சினிமாப் பாட்டு ஒன்றை முணுமுணுத்தது. விசையைச் சட்டென்று அழுத்தினார் அவர். "ஆமாம்! முதலியார் மச்சான்தான் பேசறேன். என்னங்க... செங்கல்பட்டிலே இருக்கியளா? இன்னும் அரை மணியிலே வந்துடலாங்க... ஆமாம்... சொல்றேன்...''

தொலைபேசிச் செய்தியை, கிழவியிடம் போய் வெகு பவ்யமாகச் சொன்னார் அவர். கிழவியின் முகம் துயரத்தையும் மீறிக் கொண்டு மலர்ந்தது. அதே மலர்ச்சியோடு தரையில் கிடந்த உடலையும் பார்த்தாள். கண்கள் மூடியிருந்தன. கடைசிவரை தேடி அலுத்துப் போன கண்கள் இப்போது மூடப்பட்டுவிட்டன.

"தம்பி வந்துடுச்சுங்க. இன்னும் அரைமணி நேரமோ முக்கா மணியோ... இருங்க..'' முதலியாரோடு பேசுகிற கிழவியின் குரல் அங்கே மௌனத்தை மீறி எதிரொலித்தது.

"நல்ல காலமடாப்பா...'' என்று ஒருவர் நிம்மதிப் பெருமூச்சு விடுவது காதில் விழுந்து நிமிர்ந்து பார்த்தாள் கிழவி. எரிந்தது பார்வை!

'மகனோ, மகளோ, மருமகளோ யாரும் முக்கியமில்லே... தம்பிதான் முக்கியம். அது வந்த பொறவுதான் இவுக வெளியே போவாக...' என்று தீர்மானமாய்ச் சொல்லியிருந்தாள் கிழவி.

தம்பி என்று கிழவி குறிப்பிட்டது சங்கமேசுவரனைத்தான். அய்யர் வீட்டுப் பிள்ளை; ஆனாலும், முதலியாரோடு பல ஆண்டுகளாய் ஒன்றிவிட்டவன். சொந்த மகனுக்கும் மேலாகப் பாசம் காட்டியவன்.

முதலியார் கல்லூரிப் பேராசிரியராக இருந்தபோது அவரிடம் தமிழ் படித்தவன். 'இங்கிலீஷ் புரெபஸராக' உத்தியோகத்துக்குப் போனவன். விடாப்பிடியாகத் தமிழிலும் நிறைய எழுதிப் பிரபலமாகிவிட்டவன்.

"சங்கமா! நீ என்ன படிச்சா என்ன, என்ன வேலை பார்த்தா என்ன? நல்ல புள்ளைன்னு பேரு வாங்குடா... அது தாண்டா எனக்கு நீ கொடுக்கற குரு காணிக்கை...'' என்று வாய்க்கு வாய் சொல்கிற முதலியார், இனிமேல் பேச மாட்டார்.

பக்கத்து ஊரில் இருந்தபோது வாரம் ஒரு முறையாவது முதலியாரை வந்துபார்த்துப் பேசிவிட்டுப் போவான். தொலைவில் போனபிறகு கடிதங்கள். இப்போது, வசதியாகத் தொலைபேசி, மோபைல்... என்று அறுபடாத தொடர்பு இருந்தது. இப்போது அவரே அந்தத் தொடர்பைத் துண்டித்துக்கொண்டுவிட்டாரோ என்று தோன்றியது சங்கமேசுவரனுக்கு.

செங்கல்பட்டுவரை வந்துவிட்ட நீண்ட பயணம், இப்போது இன்னும் அரைமணிதான் என்கிறபோது என்னமோ கல்பகோடிக் காலம் என்பதாக நீண்டுகொண்டே போவதாக ஒரு பிரமை.

ஆறு மாதங்களுக்கு முன்னால்தான் சங்கமேசுவரனுக்கு அரசாங்கம் உயர் விருது ஒன்றை வழங்கிப் பெருமைப்படுத்தியது. குடியரசுத் தலைவர், அமைச்சர்கள், தொழிலதிபர்கள் என்று கலந்துகொண்ட விழா அது. விருதைப் பெற்றுக்கொண்டு நன்றியுரை சொன்ன போது அவன் அவனையும் அறியாமல் மரபை மீறினான். 'புரோட்டோக்கால்' பற்றியெல்லாம் புத்தியில் உறைக்கவில்லை.

'மேதகு குடியரசுத் தலைவர் அவர்களே...' என்று முன்னிலைப் படுத்தாமல்... 'குருப்யோ நம; என் முன்னால் வந்து அமர்ந்து என்னை வாழ்த்தும் என் ஆசான் முதலியார் அவர்களே...'' என்று தொடங்கியபோது விழாத் தலைமையேற்றவர் உட்படப் பலரும் முணுமுணுத்தார்கள். அவன் மேடையைவிட்டு இறங்கி, தன் குருநாதரை நமஸ்காரம்பண்ணிவிட்டு நிமிர்ந்த போது யாரோ அழைத்தார்கள். குடியரசுத் தலைவர் கூப்பிடுவதாய் ஓர் அதிகாரி வந்து அழைத்தார். கலங்கியிருந்த கண்களோடு அவரிடம் போனான். குடியரசுத் தலைவர், தம் இருக்கையை விட்டு எழுந்து அவனுடைய தோளில் தட்டி வாழ்த்தினார். "குருப்யோ நம; ஐ அப்ரிஷியேட் யூ.''

'புரோட்டோக்காலை'ப் பற்றிக் கவலைப்பட்டவர்களுக்கு இன்னோர் அதிர்ச்சியாகிவிட்டது இது.

அந்த சங்கமேசுவரனுக்காக முதலியார் காத்துக் கிடக்கிறார்.

இன்னொரு நிகழ்வு. நான் கைந்து ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு சாலை விபத்து. முதலியார் பயணம்செய்த கார் சாலையோரம் உருண்டிருந்தது. அவரை மீட்க வந்தவர்களிடம் முதலியார், வேதனையையும் பொருட்டாக மதியாமல் சொன்னது: "என்னோட சட்டைப் பையிலே சின்ன டயரி இருக்கு... அதுல கே. எஸ்.ன்னு பாருங்க... அவரைக் கூப்பிடுங்க...'' என்றுதான்.

அந்தக் கே. சங்கமேசுவரன்...

வீட்டுக்குள் நுழைந்த சங்கமேசுவரனால் கதறியெல்லாம் அழத் தோன்றவில்லை. தரையில் கிடந்தவரின் அருகே போய்ச் சிலையாக நிற்கத்தான் முடிந்தது அவனால்.

வீடே, ஊரே அதிர்கிற மாதிரி கட்டுடைத்த வெள்ளமாய்க் கதறி அழுதவள் கிழவிதான். அதுவரை அடங்கியிருந்த துயரம் எல்லாம் உடைப்பெடுத்துப் பெருகிய வெள்ளம் மாதிரி வெளிப்பட்டது.

அவளை யாராலும் அமைதிப்படுத்த முடியவில்லை. "சங்கமா! உனக்காகத்தாண்டா ஐயா மூணு நாளாத் தேடிக் கிட்டிருந்தாக... வந்துட்டயாடா... எங்கேயிருந்தாலும் வந்துடுவான்னு சொல்லிக்கிட்டே இருப்பாக...'' மீண்டும் உடைந்து அழுதாள் கிழவி.

சொந்த பந்தங்களின் கண்கள் சங்கமேசுவரனை ஒருவிதமான பொறாமையோடு பார்த்தன. 'முதலியார் வெளியே 'புறப்படுவதற்கு' இப்போது யாரிடம் அனுமதி கேட்பது? கிழவியிடமா, சங்கமேசுவரனிடமா?' என்று திணறினான், முதலியாரின் மூத்த மகன்.

மின்னல் வெட்டாய் அழுகையை நிறுத்திவிட்டு எழுந்தாள் கிழவி. "எல்லாம் நடக்கட்டும். போங்க..'' அவளுடைய கரங்கள் சங்கமேசுவரனின் கன்னத்தை இலோசாக வருடின. விரல்களில் ஈரம் நசநசத்தது. ■

# Holiday Homes in Sri Lanka



Bambalapitiya, Wellawatte
Kollupitiya, Kotahena
Mattakuliya, Dehiwala
Mt. Lavinia, Jaffna
Trinco,Batticaloa
Kandy, Nuwaraeliya
ஆகிய இடங்களில் உங்கள்
விடுமுறையை கழிக்க, வீடுகள்
ஒரு அறை தொடக்கம்
3 அறைகள் வரை
எடுத்துத்தரப்படும்.

உங்கள் உறவுகளை நாம் **Airport** ல் வரவேற்க காத்திருக்கிறோம்.







**T.P : +94 777 561346**

தொடர்புகளுக்கு : travel care : E-mail : thetravelcare@gmail.com
Skype : the travel care / Web : www.travelcare.com.lk



- சச்சின் டெண்டுல்கர்
- ராகுல் திராவிட்
- விராட் கோஹ்லி

# இந்திய கிரிக்கெட்டின் எதிர்காலம்

**வெற்றிகளைக் குவிக்கிறதோ இல்லையோ, இந்தியா சாதனையாளர்களை உருவாக்குகிறது**

அரவிந்தன்

இந்திய கிரிக்கெட்டுக்கு தற்போதைக்கு எந்த நெருக்கடியும்வர வாய்ப்பில்லை. காரணம், இன்னமும் மூன்று மாதங்களுக்கு இந்தியா எந்த சர்வதேசப் போட்டியிலும் கலந்துகொள்ளப்போவதில்லை. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் நடக்கவிருக்கும் தொடர்களும் இந்தியாவிலேயே நடப்பவை என்பதால் அவற்றிலும் பெரிய நெருக்கடி இருக்கமாட்டாது. எனவே, இந்திய கிரிக்கெட்டின் எதிர்காலம் குறித்து யோசிப்பதற்கான சரியான நேரம் இது.

இந்திய கிரிக்கெட்டில் அண்மையில் மூன்று முக்கியமான நிகழ்வுகள் நடைபெற்றிருக்கின்றன. ஒன்று; நூறு சதங்கள் அடித்த சச்சின் டெண்டுல்கரின் சாதனை. மற்றையது; இந்திய பெருஞ்சுவர் என்று வர்ணிக்கப்படும் ராகுல் திராவிடின் ஓய்வு. மூன்றாவது; இளம் வீரர் விராட் கோஹ்லியின் எழுச்சி. இந்த மூன்றுமே இந்தியக் கிரிக்கெட்டின் எதிர்காலம் பற்றிய சில செய்திகளை நமக்குச் சொல்கின்றன.

இந்திய கிரிக்கெட் அணி வெற்றிகளைக் குவிக்கிறதோ இல்லையோ, தனிப்பட்ட சாதனையாளர்களை உருவாக்குகிறது. டான் பிராட்மனின் 29 சதங்கள் என்னும் சாதனையைப் பல ஆண்டுகள் கழித்து முறியடித்த வீரர் இந்தியாவின் சுனில் கவாஸ்கர். ரிச்சர்ட் ஹாட்லியின் சாதனையை முறியடித்தவரும் இந்தியரான கபில்தேவ்தான். இன்று, இந்த இருவரது சாதனைகளும் முறியடிக்கப்பட்டுவிட்ட நிலையில் இன்னோர் இந்தியர் சாதனைமேல் சாதனையாகக் குவித்துவருகிறார். 22 ஆண்டுகளாகச் சீரான திறமையோடும் அசாத்தியமான அர்ப்பணிப்பு உணர்வுடனும் ஆடிவரும் சச்சின் டெண்டுல்கர், கிரிக்கெட் உலகின் சிகரத்தில் நிற்கிறார். டெஸ்ட் போட்டிகள் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் அதிக ஆட்டங்கள், அதிக ஓட்டங்கள், அதிக அரை சதங்கள், அதிக சதங்கள் என்று கிட்டத்தட்ட எல்லாச் சாதனைகளையும் தன்வசம் வைத்திருக்கிறார். இவற்றுக்கு மகுடமாக, சர்வதேசப் போட்டிகளில் 100 சதங்களையும் அடித்துவிட்டார்.

இவற்றில் பெரும்பாலான சாதனைகளைப் பிறரால் நெருங்கக்கூட முடியாது. இவருக்கு அடுத்த நிலையில்




விராட் கோஹ்லி

இருக்கும் ரிக்கி பொன்டிங் அடித்துள்ள சதங்கள் 79. அதற்கடுத்து ஜாக் காலிஸ் 59. பொன்டிங் ஒரு நாள் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றுவிட்டார். டெஸ்ட் போட்டிகளிலும் சீக்கிரமே ஓய்வுபெற்றுவிடுவார் என்றே தோன்றுகிறது. ஆனால், காலிஸ் மூன்று விதமான போட்டிகளிலும் ஆடிவருகிறார். இவரது திறமையைப் பார்க்கும்



சச்சின் ரெண்டுல்கர்



ராகுல் திராவிட்

போது இவரால் சச்சினின் சாதனைகளில் ஒன்றிரண்டையேனும் முறியடிக்க முடியும் என்றே தோன்றுகிறது. இவர் சச்சினைவிட இரண்டு வயது இளையவர். சச்சினை விடவும் 36 டெஸ்ட்கள் குறைவாகவே ஆடியிருக்கிறார். டெஸ்ட் போட்டிகளில் 42 சதங்களை அடித்துள்ள இவர் இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் ஆடினால் 50 சதங்களைக் கடக்கலாம். ஆனால், அதற்குள் சச்சின் மேலும் சில சதங்களைப் போட்டிருப்பார். காலிஸின் ஆட்டத்திறன் அப்படியே இருக்கும் என்று சொல்லமுடியாது. மிக வேகமாக சச்சினைத் துரத்திவந்த பொன்டிங் இடையில் தடுமாறி நின்றதைப் பார்த்தோம். அதுபோன்ற சறுக்கல் நிகழாத பட்சத்தில் காலிஸ் டெஸ்ட் போட்டிகளில் சச்சினின் சதங்களை நெருங்கலாம். ஆனால், ஒட்டுமொத்தமாக 100 சதங்கள் என்பது அவருக்கும் எட்டாக்கனியாகவே இருக்கும். காரணம், சச்சின் ஐந்து ஒருநாள் போட்டிகளில் ஒரு சதம் என்ற வீதத்தில் அடித்திருக்கிறார். காலிஸ் 321 போட்டிகளில் 17 சதங்கள் மட்டுமே எடுத்திருக்கிறார்.

சச்சினின் சாதனைகள் பெரும்பாலும் சிறந்த எதிரணிகளுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டவை. முதுகு, முழங்கை, முன்னங்கால், தோள்பட்டை என்று பலவிதமான உடல்நலப் பிரச்னைகளைத் தாண்டிவரும் மன உறுதியும் விடாமுயற்சியும் சச்சினிடம் இருக்கிறது. கிரிக்கெட்மீது அவருக்கு இருக்கும் நேசம் அளவிடற்கரியது. இன்று, இந்திய அணியில் உள்ள எல்லோருமே சச்சினால் உத்வேகம் பெற்றவர்கள். மேலும் கோடிக்கணக்கான இளைஞர்கள் சச்சினைப்போலச் சாதிக்கவேண்டும் என்ற உத்வேகம் கொண்டிருக்கிறார்கள். ஓய்வுபெறும் கட்டத்தை நெருங்கிவிட்ட சச்சின் இளம் ஆட்டக்காரர்களுக்கு ஓர் இலட்சிய உருவமாகவும் வழிகாட்டியாகவும் இருக்கிறார். விராட் கோஹ்லி, ரோஹித் ஷர்மா, சுரேஷ் ரெய்னா போன்றவர்கள் சச்சினோடு ஆடும் வாய்ப்பைப் பெற்றவர்கள். இந்திய கிரிக்கெட்டின் எதிர்காலம் இவர்களது துடுப்பைச் சார்ந்தே இருக்கிறது. சச்சினைப் போன்ற ஒரு மகத்தான சாதனையாளரின் இடத்தை நிரப்புகிறோம் என்ற எண்ணமே ஓர் இளம் வீரருக்குப் பொறுப்பையும் பெருமிதத்தையும் ஏற்படுத்தும். இந்த உணர்வுகள் இந்திய கிரிக்கெட்டின் எதிர்காலத்துக்கான அஸ்திவாரமாக அமையலாம்.

இந்தச் சமயத்தில் ராகுல் திராவிட் தன் ஓய்வை அறிவித்திருக்கிறார். “என் வாழ்க்கையைக் காப்பாற்ற யாரேனும் களம் இறங்கி துடுப்பைப் பிடிக்க வேண்டும் என்றால் எனக்காக ஆடும்படி நான் ராகுல் திராவிடைத்தான் கேட்டுக்கொள்வேன்” என்று பிரையன் லாரா ஒருமுறை கூறினார். அந்த அளவுக்கு, உத்தரவாதம் என்பதன் உருவமாக திகழ்ந்தார் திராவிட். மூன்றாவது ஆட்டக்காரராக களம் இறங்கும் இவர் ஒவ்வொரு முறையும் கடைசிவரை களத்தில் நிற்கவேண்டும் என்ற உறுதியோடு களம் இறங்குவார். பலமுறை அப்படி நின்றுமிருக்கிறார். 2001இல் இவரும் ஜீ. ஜீ. எஸ். லட்சுமணனும் கொல்கத்தாவில் ஒரு நாள் முழுவதும் விளையாடியது கிரிக்கெட் வரலாற்றில் மறக்கமுடியாத ஒரு நிகழ்வு. மிகச்

சிறந்த பந்து வீச்சைக்கொண்டிருந்த அவுஸ்திரேலிய அணிக்கெதிராக அவர்கள் அப்படி ஆடினார்கள். தொடர்ந்து 16 டெஸ்ட் போட்டிகளில் வென்ற அவுஸ்திரேலிய அணியைத் திணறடிக்கச்செய்து வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைத் தேடித் தந்தார்கள்.

நீண்ட நேரம் களத்தில் நிற்பது டெஸ்ட் போட்டிகளுக்கு மிகவும் முக்கியமானது. 1996இல் இங்கிலாந்தில் அறிமுகமானபோதே ராகுல் திராவிட் தனக்கு அந்தத் திறமையும் பொறுமையும் மன உறுதியும் இருப்பதை நிரூபித்தார். பாகிஸ்தானிலும் ஒருமுறை அவர் ஒரு நாள் முழுவதும் ஆட்டமிழக்காமல் ஆடியிருக்கிறார். டெஸ்ட் போட்டிகளில் ராகுலை அசைப்பது அவ்வளவு எளிதல்ல. அதனால்தான், அவரைச் 'சுவர்' என்கிறார்கள். 16 ஆண்டுகளாகக் களத்தில் பாதுகாப்பு அரணாக அசராமல் நின்ற இந்தப் போராளி இப்போது ஓய்வுபெற்றிருக்கிறார்.

சச்சின், திராவிட், லட்சுமணன் ஆகிய மூவரும் உலகின் எல்லா ஆடுகளங்களிலும் எல்லாவிதமான பந்து வீச்சுகளுக்கு எதிராகவும் ஓட்டங்களைக் குவித்தவர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் தமக்கே உரிய விதத்தில் எதிரணியின்மீது ஆதிக்கம் செலுத்துபவர்கள். ஆடும் பாதி வெவ்வேறாக இருந்தாலும் ஆட்டத்தின்மீதான அர்ப்பணிப்பு, நெருக்கடிகளை எதிர்கொள்ளும் திறன், எதிர்மறையான சூழ்நிலைகளில் மாறுபட்ட உத்திகளைப் பயன்படுத்தும் அணுகுமுறை, களத்திலும் களத்துக்கு வெளியிலும் கண்ணியமாக நடந்துகொள்ளுதல் முதலான பண்புகள் இவர்களுக்குப் பொதுவானவை.

இந்திய நடுவரிசையின் மறக்க முடியாத இந்த மும்மூர்த்திகளில் ஒருவரான திராவிட் ஓய்வுபெற்றுவிட்டார். மீதி இருவரும் இன்னும் ஓரீராண்டுளில் ஓய்வுபெற்றுவிடுவார்கள். இந்நிலையில் இந்திய கிரிக்கெட்டை அடுத்த பத்தாண்டுகளுக்குத் தாங்கிப்பிடிக்க வேண்டிய இளைஞர்கள் இந்த மூவரிடமிருந்தும் கற்றுக்கொள்வதற்கு நிறையப் பாடங்கள் உள்ளன.

இந்தத் தருணத்தில்தான் 22 வயதான விராட் கோஹ்லியின் எழுச்சி முக்கியத்துவம் பெறுகிறது. இவர் களத்தில் காட்டும் திறமை, பொறுமை, எதிர்த்துத் தாக்கும் அணுகுமுறை, தவறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளும் பாங்கு, சவால்களைத் துணிச்சலாக எதிர்கொண்டு வெல்லும் மன உறுதி ஆகியவை இவர்மீதான நம்பிக்கையை அதிகரிக்கச்செய்கின்றன. அவுஸ்திரேலியாவில் பேர்த்திலும் சிட்னியிலும் இவர் ஆடியதைப் பார்த்தவர்கள் திராவிடுக்குப் பின் 3ஆம் இடத்துக்குப் பொருத்தமானவர் என்று சொன்னார்கள். ஒருநாள் போட்டிகளில் இவர் ஆடும் ஆட்டத்தைப் பார்ப்பவர்கள், 'அடுத்த சச்சின்' என்று சொல்கிறார்கள். ஒரே நேரத்தில் திராவிடுடனும் சச்சினுடனும் ஒப்பிடப்படுவது என்பதே குறிப்பிடத்தக்க சாதனைதான்.

22 வயதில் 85 ஒரு நாள் போட்டிகளில் 11 சதங்கள் அடித்துள்ள கோஹ்லி சச்சினின் 100 சதங்கள் என்ற சாதனையை முறியடிக்கக்கூடும் என்று சிலர் ஆருடம் சொல்கிறார்கள். மகேந்திர சிங் தோனிக்குப் பிறகு அணித் தலைவராகும் தகுதி இவருக்கு இருக்கிறது என்று பலரும் கணிக்கிறார்கள். சத சாதனையும் தலைமைப் பதவியும் இருக்கட்டும். அணி அதிக போட்டியில் வெற்றிபெற இவர் உதவவேண்டும் என்பதுதான் முக்கியம். இந்த முனைப்பு இருந்தால் சாதனைகள் தாமே அணிவகுக்கும். சச்சின், பொன்டிங், லாரா, காலிஸ், திராவிட் போன்றவர்கள் சாதனைகள்புரிய உதவியது இந்த முனைப்புத்தான். அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற முத்தரப்புத் தொடரிலும் ஆசிய கிண்ண போட்டியிலும் முக்கியமான ஆட்டங்களில் இவர் ஆடிய ஆட்டம் இவருக்கு அந்த முனைப்பு இருப்பதைக் காட்டியது.

கோஹ்லி கவனம் செலுத்தவேண்டிய விஷயங்கள் இரண்டு இருக்கின்றன. முதலாவதாக, அவர் களத்தில் உணர்ச்சிவசப்படுகிறார். அவுஸ்திரேலியாவில் தன்னைப் பரிகசித்த பார்வையாளர்களை நோக்கி நடுவிரலைக் காட்டினார். வேறுசில சந்தர்ப்பங்களிலும் உணர்ச்சிவசப்பட்டிருக்கிறார். எதிரணியினரும் அவர்களது நாடுகளைச் சேர்ந்த இரசிகர்களும் எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு மன உறுதியையும் முனைப்பையும் குலைக்கப் பார்ப்பார்கள். குறிப்பாக அவுஸ்திரேலியர்கள் இதில் கை தேர்ந்தவர்கள். ஆனால், அவர்கள் சச்சினையோ திராவிடையோ வெறுப்பேற்றுவதை நிறுத்திவிட்டார்கள். காரணம், அவர்கள் வெறுப்பேற்ற வெறுப்பேற்ற இவர்களுடைய மன உறுதியும் கவனக் குவிப்பும் அதிகரிக்கின்றன. மேலும் சிறப்பாக ஆடுகிறார்கள்.

சச்சின், திராவிட் ஆகியோரிடமிருந்து ஆட்ட நுணுக்கங்களை மட்டுமல்லாமல், இந்த குணத்தையும் கோஹ்லி கற்றுக்கொள்ளவேண்டும்.

அடுத்து, செய்தி ஊடகங்களின் பாராட்டையும் விமர்சனங்களையும் கையாளத் தெரிந்துகொள்ள வேண்டும். அடுத்தடுத்து இரண்டு சதம் அடித்தால் சச்சினுக்கு இணையாக சிலர் பேசுவார்கள். அடுத்தடுத்து மூன்று போட்டிகளில் சறுக்கினால் துடுப்பை எப்படிப் பிடிப்பது என்று சொல்லிக் கொடுக்கவும் சிலர் ஆரம்பித் துவிடுவார்கள். இதையெல்லாம் கண்டு அசராமல், புகழ்ச்சி, இகழ்ச்சிகளைச் சமமான மனநிலையுடன் அணுக வேண்டும்.

மூத்தவர்கள் ஒவ்வொருவராக விலகி, இளையவர்கள் பொறுப்பேற்கும் இந்தக் கட்டத்தை இந்திய கிரிக்கெட்டின் திருப்புமுனைத் தருணம் என்று சொல்லலாம். கவலை தரும் ஓர் அம்சம் இந்தத் தருணத்தின் களங்கமாக அமைந்திருக்கிறது. துடுப்பு வீச்சில் உருவான அளவுக்கு பந்து வீச்சில் புதிய திறமைசாலிகள் உருவாகவில்லை. குறிப்பாக டெஸ்ட் போட்டிகளில் ஜாகீர் கான் இன்னும் எத்தனை தொடர்களுக்கு தாக்குப் பிடிப்பார் என்று தெரியவில்லை. இஷாந் ஷர்மா ஐந்து ஆண்டுகளுக்குள் சோர்ந்துவிட்டார். உமேஷ் யாதவ், அபிமன்யு மிதுன் போன்றவர்கள் அந்த அளவுக்கு நம்பிக்கைக்குரியவர்களாக உருப்பெறவில்லை. ஒருநாள் போட்டிகளில் சுமாராக வீசும் பிரவின் குமார் போன்றவர்கள் டெஸ்டில் பெரிதாகச் சோபிக்கவில்லை. ஆவுஷ் ரெயினா, ஆர். பி. சிங் என்று பழைய முகங்களே மீண்டும் மீண்டும் பரிசீலிக்கப்படுகின்றன. இவர்களும் அற்புதமாக வீசி அணிக்கு ஆசுவாசம் அளிப்பதில்லை.

சுழல் பந்து விடயத்திலும் சொல்லிக்கொள்ளும்படி இல்லை. ஹர்பஜன் சிங் ஓரங்கட்டப்பட்டிருக்கிறார். கிடைத்த வாய்ப்பை ரவிச்சந்திரன் அஸ்வின் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. பியுஷ் சாவ்லா, பிரக்ஞான் ஓஜா போன்றவர்களும் அந்த அளவுக்கு தயாராகவில்லை. இந்தியாவுக்குள் நடக்கும் போட்டிகளில் இவர்களை வைத்து ஒப்பேற்றிவிடலாம். ஆனால், வெளிநாடுகளில்...? வலுவான பந்து வீச்சு, அதிலும் வேகப் பந்து வீச்சு இல்லாவிட்டால், எவ்வளவு வலுவான துடுப்பு வீச்சு இருந்தாலும் வெளிநாடுகளில் டெஸ்ட்களில் வெல்ல முடியாது.

இந்திய கிரிக்கெட் வாரியம் பணத்தை எண்ணிக்கொண்டிருப்பதைச் சற்றே நிறுத்திவிட்டு, பந்து வீச்சின் வலிமையைப் பெருக்குவது பற்றித் தீவிரமாக யோசிக்கவேண்டும். ■

# MARUTHI
## CASH & CARRY

குறைவான விலையில்
நிறைவான பொருள்கள்

15-17 Queensbury Station Parade
Queensbury
Edgware HA8 5NR

**Tel: 020-8952 6655**

## மாருதி எக்ஸ்பிரஸ்

Priority for Quality & Taste

தரமானவை
சுவையானவை



உங்கள் வைபவங்களுக்குத்
தேவையான
அனைத்து
சிற்றுண்டி, உணவு வகைகள்


## Maruthi Express
Take away & Catering

14 Queensbury Station Parade, Queensbury, Edgware HA8 5NR

**Tel: 020-3302 4824**

## ஆர். நடராஜன்

பத்திரிகையாளர்,
அமெரிக்க தூதரக
முன்னாள் அரசியல் ஆலோசகர்

# மதுரைக்கு மட்டுமா வந்த சோதனை?

**காவி வேட்டிக்காரர்கள் கரை வேட்டிக்காரர்களைவிட ஆபத்தானவர்கள். கட வுளே, நாட்டை முதலில் காவி உடைக்காரர்களிடமிருந்து காப்பாற்றுங்கள்**

திருவண்ணாமலை ராஜசேகர னுக்கு மதுரை அருணகிரி ஏதாவது ஒரு சொத்தை விற்றால் யாரும் கேள்வி கேட்கமுடியாது. அது தனிநபர் விவகாரம். ஆனால், அருணகிரி ஒரு புராதன மடத்தின் ஆதீன கர்த்தராக இருப்பதும், ராஜசேகரன் தனக்குத் தானே பரமஹம்சர் பட்டம் சூட்டிக்கொண்டுள்ள போலிச் சாமியார் என்பதும், விற்கப்பட்டது ஆயிரத்து 400 வருடப் பழமையான சைவத் திருமடம் என்பதாலும் இந்த 'மட' விவகாரத்தில் யாரும் கேள்விகள் கேட்கலாம். மடத்தின் சொத்து ஆதீனகர்த்தர் சுயமாகச் சம்பாதித்தல்ல. சொத்தை என்னவேண்டுமானாலும் செய்வதற்கு உரிமை இருப்பதாக இவர் சொல்வதும் கேள்விக்குரியதே. எல்லாமே பணம் தான் என்பது இப்போது வெட்டவெளிச்சமாகிவிட்டது. பணத்துடன் தொடர்புடைய சகல பாவங்களும் இந்த விவகாரத்தில் இருப்பதனால் மக்கள் சங்கடப்படுகிறார்கள்.

மடாதிபதிகளான பிறகே சிலர் வம்புதும்புகளில் சிக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், 'செக்ஸ்' புகாரில் சிக்கி, சிறைசென்று, வழக்கிலிருந்து மீளாத ஒரு நபர் பாரம்பரியம்மிக்க மடத்தின் இளைய பட்டம் என்ற பதவியை விலைக்கு வாங்கியிருப்பது ஆதீனங்களின் வரலாற்றில் எப்போதும் இருந்திராத அவமானக் கறை.

மதுரை ஆதீனமும் நித்தியானந்தா என்று அழைத்துக்கொள்ளும் திருவண்ணாமலை ராஜசேகரனும் பேசியுள்ள பேச்சுக்கள் அவர்களது யோக்கியதையை அப்பட்டமாக வெளிப்படுத்திவிட்டன. "திருமணமாகி பிள்ளை பெற்ற அத்தனைபேர் மீதும் செக்ஸ் புகார் கொடுக்கலாம்'' என்று திருவாய்



**அருணகிரி ஒரு புராதன மடத்தின் ஆதீனகர்த்தராக இருப்பதும், ராஜசேகரன் தனக்குத்தானே பரமஹம்சர் பட்டம் சூட்டிக்கொண்டுள்ள போலிச் சாமியார் என்பதும், விற்கப்பட்டது ஆயிரத்து 400 வருடப் பழமையான சைவத் திருமடம் என்பதாலும் இந்த 'மட' விவகாரத்தில் யாரும் கேள்விகள் கேட்கலாம்**

மலர்ந்திருக்கிறார் ஆதீனம். அடாடா, என்ன ஞானம், என்ன ஞானம்!

பெங்களூர்க்காரரை மதுரைக்காரர் நியமனம் செய்தது சரியல்ல. செய்த முறையும் சரியல்ல. இது சம்பிரதாய மீறலுக்கும் அப்பால்பட்டது. ஆதீன கர்த்தரானதிலிருந்தே சர்ச்சைக்குள்ளானவர் மதுரைக்காரர். தனது உயர்ந்த பொறுப்புக்களுக்கு ஒவ்வாதபடி ஆவேசமாகப் பேசுவது, கூடாத மேடைகளில் ஏறுவது, தனிப்பட்ட உரையாடல்களிலும் கண்ணியம் காக்காதது என்று பலவிதமான ஒழுக்கமீறல் புகார்கள் இவர்மீது உண்டு. இவரைக் கவனித்த 'தினமலர்' சிதம்பரம் நிருபர் குருமணி, 1982இல் சொன்ன நறுக்கென்ற வாசகம் இன்றும் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. "இவரைச் சொல்லக்கூடாது; இவருக்குக் கொட்டைகட்டியவரைச் சொல்ல வேண்டும்''. அதாவது, அருணகிரிக்கு இந்தப் பதவியைக் கொடுத்தவரே இன்றைய அவலத்துக்கு பழியேற்கவேண்டியவர். அவர்தான், சோமசுந்தரத் தம்பிரான் என்று அழைக்கப்பட்ட, திருஞானசம்பந்தர் மடத்தின் 291ஆவது குருமஹாசந்நிதானம்.

பெரியவரைப்பற்றி இப்படியான புகார்கள் எழுந்ததில்லை. ஆவிகளுடன் பேசுவதாகச் சொல்லிப் பரபரப்பை ஏற்படுத்தினார். பிற மதத்துக்குச் சென்றவர்களை இந்து மதத்துக்கு திருப்புவதை ஒரு பணியாகச் செய்துவந்தார். படகுபோன்ற பெரிய காரில் பயணிப்பார். அது மடத்தின் வாகனம். அந்தக் காலத்தில் அது பெரிய கார். தெருவில் போகும் எல்லோரின் கவனத்தை யும் கவரும். அவரது இயற்பெயர் சுந்தரம்பிள்ளை. கொழும்பிலும் லண்டனிலும் வியாபாரம்செய்துவந்த சைவ

வேளாள இனத்தைச் சேர்ந்தவர். மடத்தின் நிதி நிலைமை சிரமமாக இருந்த காலத்தில் அவர் தன் சொந்தப் பணம் ஐம்பதாயிரத்தை மடத்துக்குக் கொடுத்தார் என்று சொல்லப்படுகிறது. அவருக்கு வசதி இருந்தது, கொடுத்தார். அப்போது அது பெரிய தொகை. மடத்துக்கு தேவையாக இருந்தது.

சோசுந்தரத் தம்பிரானையடுத்து வந்த அருணகிரி சரியான தேர்வல்ல என்று முன்பே மடத்தைச் சேர்ந்தவர்கள் முணுமுணுத்தார்கள். ஏனென்றால், ஒரு துறவிக்கு வேண்டிய முக்கிய குணங்கள் அவரிடம் இல்லை. அப்போதும் இல்லை; இப்போதும் இல்லை.

பணம் அன்றும் இன்றும் வந்த வழியைப் பார்ப்போம். சுந்தரம்பிள்ளை வியாபாரம் செய்து சொத்துச் சேர்த்தார். திருவண்ணாமலை ராஜசேகரன் அப்படிச் செய்யவில்லை. அவரது பணம் எத்தனை கோடியாகவிருந்தாலும் நல்லவழியில் வந்ததாகத் தெரியவில்லை. சாமியார்கள் ஏன் இப்படிப் பணப்பித்துப் பிடித்து அலையவேண்டும்? 'ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்' என்று துறவிகளுக்கு இலக்கணம் சொல்லப்பட்டது இவர்களுக்குப் பொருந்தாது. துறவிகள் என்று சொல்லிக்கொண்டாலும் இவர்கள் துறந்தது நல்லொழுக்கங்களையே.

நித்தியானந்தர் என்று தன்னை அழைத்துக்கொள்ளும் திருவண்ணாமலை ராஜசேகரன் ராமகிருஷ்ண மடத்தில் பிரம்மச்சாரிப் பயிற்சிக் காலத்தில் ஒழுக்க நியதிகளுக்குக் கட்டுப்படாததனால் வெளியேறியவர் அல்லது வெளியேற்றப்பட்டவர். தன் பயிற்சிக் காலத்தில் ஓர் அரசியல்வாதி இறந்துபோனபோது அழுது, அரற்றி, துறவுப் பெருமைக்கு உகந்தபடி நடந்துகொள்ளாததனால் வெளியேற்றப்பட்டவர் அருணகிரி என்னும் மதுரை ஆதீனம் என்று மடங்களின் வரலாற்றை எழுதிய ஒரு துறவி சொல்கிறார். இப்படிப்பட்டவர்களிடம் சைவத் திருமடங்கள் அகப்பட்டுக் கொள்வது வேதனையாக இருக்கிறது.

மதுரை ஆதீன விவகாரத்தில் சம்பிரதாயங்கள் எதுவும் பின்பற்றப்படாமல் வியாபார பேரங்களே நடந்திருக்கின்றன. திரௌபதி துகிலுரிதலை பாஞ்சாலி சபதத்தில் விளக்கும்போது,

"வாயிற்காத்து நிற்போன் வீட்டை வைத்து இழத்தல் போலும்

கோயிற் பூசைசெல்வோர் சிலையைக் கொண்டு விற்றல்போலும்'' - என்று பாரதியார் பதைபதைப்பார். அவர் தர்மபுத்திரனை அன்று விமரிசித்த வார்த்தைகள் இந்த அதர்ம புத்திரனுக்கும் பொருந்தும். திரௌபதி துகிலுரியப்பட்டபோது பீஷ்மர், துரோணர், கிருபர் போன்றவர்கள் வாய்மூடி இருந்தார்கள். நல்லவேளை, மதுரைக் கூத்தில் பிற ஆதீனங்கள் அப்படி நடந்துகொள்ளவில்லை. அவர்கள் மதுரை ஆதீனத்தின் செயலைக் கண்டிக்க உடனடியாக மயிலாடுதுறையில் கூடி, நான்கு தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

1. இன்னும் பத்து நாள்களில் மதுரை ஆதீனம் தன் வாரிசு முடிவை விலக்கிக் கொள்ளவேண்டும்.

2. இளைய பட்டம் குறித்து சட்ட நிபுணர்களைக் கலந்துகொண்டு வழக்குத் தொடவேண்டும்.

3. இந்தப் பிரச்னையை அரசின் கவனத்துக்கு எடுத்துச் செல்லவேண்டும்.

4. தனி நபர்கள் மதுரை ஆதீனத்தின் மீது பொதுநல வழக்குத் தொடர்ந்தால் துறவிகள் ஆதரவு தரவேண் டும்.

வாரிசுப் பொறுப்பு இப்படி விற்கப்பட்டால் மடங்களின் எதிர்காலம் என்னவாகும்? சிறிய நிறுவனங்களைப் பெரிய நிறுவனங்கள் விலைக்கு வாங்குவதுபோல் பல மடங்கள் விலை பேசப்படும். ஏற்கெனவே மடங்களின் சொத்துக்கள் கரைந்து வருவதாகவும், நிலம் எந்தக் காலத்திலோ நிர்ணயிக்கப்பட்ட மனைகளின் குத்தகைப் பணம் ஒழுங்காக வசூலிக்கப்படுவதில்லை என்றும் சொல்லப்படுகிறது. அத்துடன், பெண்கள் மடத்தின் நிர்வாகத்தில் பங்குபெறுவது, மடத்தின் உள்ளேயே தங்குவது 'தியானபீடம்' என்று சொல்லப்படும் புதிய தான்தோன்றி மடங்களுக்கு பொருந்திவரலாம். பழைய மடங்கள் புனிதமானவை. அவற்றின் புனிதம் காக்கப்படவேண்டும். அதைக் காக்க முடியாதவர்கள் மடத்தைவிட்டு வெளியேறுவதே நியாயம். விற்பது அநியாயம்.

இது புராதன மடங்களின் நியதிகளுக்குப் புறம்பானது. கையில் பணம் இருக்கிறது என்பதனால் தவறான வழிகளில் மடாதிபதியானவர்கள் காவிப் போர்வை வர்த்தகர்கள் என்றாகிவிட்டால், காவிக்கும் மடங்களுக்கும் மதிப்பில்லாமல் போகிறது. இப்படிப்பட்டவர்கள் ஆதீனகர்த்தர் பொறுப்புக்களைத் துறந்துவிட்டு, மடங்களிலிருந்து வெளியேறி, இந்த வேலைக ளைச் செய்யலாம்; தவறில்லை.

மாட்டை விற்பவர்கூட வாங்குபவரிடம், "ஐயா, போற்றிப்போற்றி வைத்து வளர்த்தேன். விற்க மனமில்லாமல்தான் விற்கிறேன். நீங்கள் மாட்டை நன்றாக வைத்துக்கொள்வீர்களா?'' என்று ஆதங்கத்துடன் கேட்பார்கள். நாய்க்குட்டியை விற்பவர்கள்கூட அப்படி அக்கறையுடன் கேட்பார்கள். மாட்டுக்கும் நாய்க்குட்டிக்கும் இருக்கும் மதிப்புக்கூட மடாலயங்களுக்கு இல்லாமல்போய்விட்டதென்றால், அதற்குக் காரணம் சுயநல ஆதீனகர்த்தர்கள் அல்லாமல் வேறு யார்?

எவ்வளவு சிறிய, எளிமையான மடங்களாக இருந்தாலும் சில மடங்களுக்கு தனிச் சிறப்பு உண்டு. அந்தந்த இடங்களில் அவை எளிமையான சமய, ஆன்மீக பணியைச் செய்துவருகின்றன. இந்த அருணகிரி, திருவண்ணாமலை ராஜசேகரன் வியாபார பாணி ஏற்கப்பட்டால் எல்லாத் திருமடங்களும் அதிக பணமுள்ள ஒரு பெரிய மடத்தின் கிளைகளாகி, தனித்தன்மையை இழந்து தவறான பாதைகளில் செல்லும். நிதிதியானந்தா என்கிற திருவண்ணாமலை ராஜசேகரன் என்கிற, ஒழுக்க நியதிகளுக்கு உடன்படாத காவியை அவமானப்படுத்தும் நபரிடம் நிறையப் பணம் இருக்கிறது; அவருக்குத் தேவை ஒரு புராதன மடத்தின் 'குட்வில்'. அருணகிரியிடமிருந்து இந்த குட்வில்லை விலைக்கு வாங்கியிருக்கிறார் அவர். அப்படி விற்பதற்கு அருணகிரிக்கு என்ன முடையோ, வெளியே தெரியவராத பேரம் என்னவோ?

மாற்று மதத்தினர் காலத்தில் கூட பாழ்படாத சைவமடங்கள் மடாதிபதிகளாலேயே பாழ்படுகின்றன என்றால், அவர்கள் தாம் வகிக்கும் பொறுப்புகளுக்கான அருகதையை இழந்தவர்கள் என்பது தெளிவாகிறது.

இப்படியேபோனால் இந்தச் சாமியார்கள் அரசியல் செல்வாக்கை வைத்துக்கொண்டு எம். எல். சி. , ராஜ்யசபா, எம். பி. என்ற பதவிகளைப் பெறலாம்; மந்திரிகளும் ஆகலாம்; மேலும் சொத்து சேர்க்கலாம்.

மந்திரி மாணிக்கவாசகர் துறவியானது அந்தக் காலம். இப்போது துறவிகளுக்கும் பணத்தாசை, பதவி ஆசை வந்துவிட்டது. சமயம் வளர்ந்திருக்கிறது என்று இப்போது சொல்லமுடியுமோ? எப்படிப்பட்டவர்கள் இவர்கள் என்பதை அறியாமல், எல்லாக் காவிக்காரர்களையும் மக்கள் வழிபடுகிறார்களே. இது அறிவைப் புறந்தள்ளிய பக்தி அல்லவா? காவி வேட்டிக்காரர்கள் கரை வேட்டிக்காரர்களைவிட ஆபத்தானவர்கள் போலிருக்கிறது. கடவுளே, நாட்டை முதலில் காவி உடைக்காரரிடமிருந்து காப்பாற்றுங்கள். ■


Kumaran Silks
since 1955
PANAGAL PARK, CHENNAI - 17
TAMILNADU, INDIA.
www.kumaransilks.net
CUSTOMER CARE
(044) 4222 0077
12,Nageswaran Road,Panagal Park,T.Nagar,Chennai-17.Ph:(044)-24343544 / 3727 / 3757.



# சுறுசுறுப்பில் தமிழ் சினிமா உலகு

தமிழ் சினிமாவைப் பொறுத்தவரை இது வித்தியாசமான ஆண்டு. தமிழ் சினிமாவின் முன்னணி நட்சத்திரங்கள் அனைவரும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறார்கள். ரஜினிகாந், கமல்ஹாசன், விஜய், சூர்யா, விக்ரம், அஜித், கார்த்தி, விஷால், ஜீவா, ஆர்யா, தனுஷ், சிம்பு என எல்லோருமே ஏதோ ஒரு படத்தில் மும்முரமாக இருக்கிறார்கள். த்ரிஷா, காஜல் அகர்வால், அனுஷ்கா, கார்த்திகா போன்ற நடிகைகளும் பாரதிராஜா, மணிரத்தினம், ஏ. ஆர். முருகதாஸ், கே. வி. ஆனந், செல்வராகவன், மிஷ்கின் போன்ற இயக்குநர்களும் தத்தம் பட வேலைகளில் மூழ்கியிருக்கிறார்கள்.

நடிப்பு, இயக்கம் இவர்களது தொழில். இவர்கள் அதில் மும்முரமாக ஈடுபடுவதில் வியப்படைய என்ன இருக்கிறது என்ற கேள்வி எழலாம். மேலே குறிப்பிடப்பட்ட வர்களில் பெரும்பாலானவர்கள் பெரிய வணிக வட்டத்துக்குள் இருப்பவர்கள். அத்தனை சுலபமாக அடுத்தடுத்த படங்களுக்குள் அவர்களால் இறங்கிவிடமுடியாது. தமிழ் சினிமாவின் வணிக ரீதியான அந்தஸ்தில் உச்சத்தில் இருக்கும் ரஜினிகாந் ஒரு காலத்தில் ஒரே ஆண்டில் பத்துப் படங்கள் வரை நடித்திருக்கிறார். ஆனால், அவரது வணிக மதிப்பு உயரஉயர அந்த வேகம் குறைந்து கொண்டேவந்தது. பாட்ஷா, முத்து, அருணாச்சலம், படையப்பா, பாபா, சந்திரமுகி ஆகிய படங்கள் 12 ஆண்டு காலத்தில் வெளிவந்தவை என்பதை வைத்துப்பார்க்கையில் இந்த வித்தியாசம் புரியும். கமல்ஹாஸனும் சராசரியாக இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு படம்தான் நடிக்கிறார். விஜய், அஜித் முதலானவர்கள் சராசரியாக ஆண்டுக்கு ஒரு படம். கார்த்தி, ஜீவா போன்றவர்கள் இரண்டு. சில சமயம் ஒரே படத்துக்கு இரண்டு ஆண்டுகள் தாமதமாகிவிடுவதும் உண்டு (விக்ரத்துக்கு பீமாவில் ஆனதுபோல). எனவே, எல்லா நட்சத்திரங்களின் படங்களும் ஒரே ஆண்டில் வருவது ஆச்சரியம்தான்.

உடனடியாக திரைக்கு வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும் படம் அஜித்தின் 'பில்லா 2'. 'ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு கடந்த காலம் உண்டு. ஒவ்வொரு டானுக்கும் ஒரு வரலாறு உண்டு' என்னும் முத்திரை வாசகத்துடன் பில்லாவின் பின்கதையைச் சொல்கிறது இந்தப் படம். 2007இல் சற்றே சரிந்திருந்த அஜித்தின் சந்தை மதிப்பை மீண்டும் தூக்கி நிறுத்திய படம் பில்லா. இது ரஜினி நடித்த 'பில்லா'வின் மறு ஆக்கம். இந்தப் படத்துக்குப் பின் அஜித்தின் மதிப்பு மிகவும் கூடிவிட்டது. குறிப்பாக அவரது தோற்றம், ஸ்டைல் ஆகியவற்றுக்கான வசீகரம் அதிகரித்தது. அதைத் தொடர்ந்து

# துப்பாக்கியை வரவேற்று பட்டாசுகள்



ஓரிரு படங்கள் சொதப்பினாலும் 'மங்காத்தா' மீண்டும் அவரது நட்சத்திர அந்தஸ்தைத் தக்கவைத்தது. ஓராண்டு இடைவெளிக்குப்பின் வரும் பில்லா 2 பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.


முன்னாள் இந்திய அழகி பார்வதி ஓமனக்குட்டன், பிரேசில் நாட்டு அழகி புரூனோ அப்துல்லா ஆகிய இருவரும் நடித்திருக்கும் பில்லா 2 படம் இந்த மாதம் திரைக்கு வருகிறது. அஜித்துக்கு ராசியான இசையமைப்பாளர் யுவன் சங்கர் ராஜாவின் இசையில் பாடல்கள் வெளியாகிப் பிரபலமடைந்திருக்கின்றன.

அஜித் படத்தையடுத்து வரவிருக்கும் பெரிய பட்ஜெட் படம் விஷாலின் 'சமர்'. சமரன் என்ற பெயருடன் வளர்ந்து வந்த இந்தப்ப படம் இப்போது சமராகச் சுருங்கி விரைவாக வளர்கிறது. இதில் விஷாலுடன் முதல்முறையாக ஜோடி சேர்கிறார் த்ரிஷா. திரையுலகில் பத்து ஆண்டுகள் பூர்த்தி செய்துள்ள த்ரிஷா தமிழில் தன் இடத்தைத் தக்கவைக்க இந்தப் படம் உதவும் என்று நம்புகிறார். பாலாவின் 'அவன் இவன்' படத்துக்குப் பிறகு மீண்டும் அதிரடி மசாலாவில் இறங்கும் விஷால், 'சண்டைக் கோழி', 'திமிரு' படங்களின் வெற்றியை மீண்டும் ருசிக்கும் துடிப்புடன் இருக்கிறார்.

'இயக்குநர்களின் நடிகர்' என்று பெயரெடுத்தவர்களில் ஒருவரான ஜீவா, மிஷ்கின் இயக்கத்தில் 'முகமூடி' படத்தில் நடிக்கிறார். இது இந்தக் காலத்துக்கு ஏற்றாற்போல் மெருகூட்டப்பட்ட எம். ஜி. ஆர். கதை என்று மிஷ்கின் வெளிப்படையாகப் பேசியிருக்கிறார். மிகுந்த ஆர்வத்துடனும் நம்பிக்கையுடனும் இந்தப் படத்தில் நடித்துவரும் ஜீவாவுக்கு ஜோடி பூஜா ஹெக்டே. இதுவும் ஜூன் அல்லது ஜூலையில் வெளிவரும் எனத் தெரிகிறது.

'அயன்' என்னும் மாபெரும் வெற்றிப் படத்தைத் தந்த கே. வி. ஆனந் - சூர்யா கூட்டணி, 'மாற்றான்' என்னும் படத்துக் காக உழைத்துவருகிறது. தெலுங்கில் வெளியான 'மகதீரா' என்னும் பெரிய வெற்றிப் படத்தில் ஜொலித்த காஜல் அகர்வால்தான் இதில் நாயகி. அயனை அடுத்து ஆனந் எடுத்த 'கோ' படமும் மாபெரும் வெற்றி என்பதால் 'மாற்றான்' குறித்த எதிர்பார்ப்பு கணிசமாகக் கூடியிருக்கிறது.

சென்ற ஆண்டின் மிகப் பெரிய வெற்றிப் படமான 'சிறுத்தை'யின் நாயகன் கார்த்தி, 'சகுனி'யாகக் களம் இறங்குகிறார். என். சங்கர் தயாள் என்னும் இயக்குநர் எடுக்கும் இப்படத்தின் நாயகி ப்ரணிதா. 'பையா'விலிருந்து தொடங்கி அடுத்தடுத்து ஹிட் கொடுத்து வரும் கார்த்தியின் படம் என்பதால் புது இயக்குநர், பிரபலமாகாத கதாநாயகி என்பதெல்லாம் பிரச்னையே அல்ல. கார்த்தி இதில் அரசியல்வாதியாக வருகிறாராம். சிறுத்தையில் கார்த்தியுடன் இணைந்து கலக்கிய சந்தானம் இதிலும் இருக்கிறார்.




இந்த இளைஞர்களுக்கு மத்தியில் திரை வாழ்வில் பொன் விழா கண்ட கமல்ஹாஸனும் 'விஸ்வரூபம்' எடுத்துக் களம் இறங்குகிறார். உலக நாயகன் என்று புகழப்படும் கமல், உலக ளாவிய பயங்கரவாதம் என்னும் பிரச்னையை இதில் கையாள்கிறார் என்று தெரிகிறது. கமலே எழுதி, இயக்கி, நடிக்கும் இந்த படம் மிகவும் அழுத்தமான திரை அநுபவத் தைத் தரும் என்று எதிர்பார்க்கலாம்.

சோனாக்ஷி சின்ஹா உள்பட, பல நாயகிகள் பெயர் விஸ் வரூபத்தில் அடிப்பட்டது. கடைசியில் ஆன்ட்ரியா, பூஜா குமார் ஆகியோர் நடிக்க, படம் வேகமாக வளர்ந்துவந்தது. கிட்டத்தட்ட முடியும் தறுவாயில் உள்ள இந்தப் படம் ஜூலையில் வெளியாகும் என்று தெரிகிறது. 'தசாவதாரம்' எடுத்த கமலின் விஸ்வரூபமும் மக்களை பிரமிக்கவைக்குமா என்று பார்க்கவேண்டும்.

அடுத்தபடியாக எதிர்பார்க்கப்படும் படம் விக்ரத்தின் 'தாண்டவம்'. 'ராஜபாட்டை' என்னும் மாபெரும் தோல்விப் படம் தந்த விக்ரம் சுதாகரித்துக்கொள்ள வாய்ப்பளிக்கக்கூ டிய படம். 'மதராஸப் பட்டினம்', 'தெய்வத் திருமகள்' ஆகிய படங்களை இயக்கிய விஜய் இதன் இயக்குநர். இந்தப் படத் தில் அனுஷ்கா, எமி ஜாக்ஸன் ஆகிய இரண்டு அழகிகள் நடிக்கிறார்கள். விக்ரத்துக்கு இதில் இரட்டை வேடம் என் றும் சொல்லப்படுகிறது. விக்ரம் நடித்த படம் ஓடுகிறதோ இல்லையோ, நடிப்பும் உழைப்பும் பாராட்டப்படும் என்பது தெரிந்த சங்கதி. ஆனால், பாராட்டை மட்டும் வைத்துக் கொண்டு நட்சத்திரமாக ஜொலிக்கமுடியாது என்பதால் வெற்றியைத் தரவேண்டிய நெருக்கடியில் இருக்கும் விக்ரம், தாண்டவத்தைப் பெரிதும் நம்பியிருக்கிறார். படம் ஓகஸ் டில் வரலாம்.

விஜயும் ஏ. ஆர். முருகதாஸும் இணையும் 'துப்பாக்கி' பரபரப்பை ஏற்படுத்திவருகிறது. காஜல் அகர்வால்தான் இதில் நாயகி. படம் தீபாவளிக்கு வரக்கூடும் என்று தெரிகி










## பல ஆண்டுகளின் பின்னர் ரஜினி ரசிகர்களுக்கு தீபாவளிப் பரிசு

றது. இளைய தளபதியின் ரசிகர்கள் துப்பாக்கியை வரவேற்கப் பட்டாசுகளுடன் காத்திருக்கிறார்கள்.

தொண்ணூறுகளில் ஒரு தீபாவளி சமயத்தில் மதுரையில் ஒரு சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்தது. 'இது எங்களுக்குக் கறுப்பு தீபாவளி' என்பதுதான் அந்தச் சுவரொட்டியின் செய்தி. ஒட்டியவர்கள் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் ரசிகர்கள். காரணம், அந்த தீபாவளிக்கு ரஜினி படம் எதுவும் வரவில்லை. இதுதான் சூப்பர் ஸ்டாரின் வசீகரத்தின் வீச்சு.

அதன் பிறகு எத்தனையோ தீபாவளிகள் வந்துபோயின. 'அருணாச்சலம்' தவிர, ரஜினியின் வேறு எந்தப் படமும் தீபாவளியன்று வெளியாகவில்லை. பல ஆண்டுகளுக்குப் பிறகு ரஜினியின் படம் தீபாவளிக்கு வெளியாகலாம் என்று கிசுகிசுக்கப்படுகிறது. அது ரஜினியின் மகள் சௌந்தர்யா இயக்கும் 'கோச்சடையான்'. பாலிவுட் அழகி தீபிகா படுகோனே நாயகியாக நடிக்கும் இந்தப் படம், ரஜினி உடல் நலம் தேறிய பிறகு நடிக்கும் படம்.


''நான் சிவாஜி, கமல் போன்ற தேர்ந்த நடிகன் அல்ல. என்னுடைய பலம் வேகம். அந்த வேகம் இருக்கும்வரை நடிப்பேன்'' என்று சில மாதங்களுக்கு முன் ஒரு விழாவில் ரஜினி பேசினார். அவரது குன்றாத வேகத்தைப் பார்க்கும் ஆவலில் ரசிகர்கள் தீபாவளியை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்கள். ஒரு நடிகர் என்ற முறையில் அவரது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் படமாக இது இருக்கும்.

**– சென்னைத் திரை வாசல்**

# கால நதி

மறைவு

ப்ரிட்ஸ் ஸ்டால்



## நவீன வேதவியாசன்

வேத மரபு என்பது சடப்பொருள், மனம் என்ற வரையறைகளை மேவி, மனித ஆத்மா கண்டடைந்த வெற்றியே என்று கூறிச் சென்றவர் ப்ரிட்ஸ் ஸ்டால் *(Frits Staal)*.

இந்தியவியலின் தலைமகனாகத் திகழ்ந்த ப்ரிட்ஸ் ஸ்டால், டச்சு நாட்டவரென்றாலும் சர்வதேசிய மனிதராக கருதப்படவேண்டியவர். தனது 81ஆவது வயதில் தாய்லாந்தின் சியாங்மாயில் மரணித்த அவரின் இழப்பு வேதவரலாற்றின் மிகப்பெரிய இழப்பாகும்.

அம்ஸ்ரர்டாம் பல்கலைக் கழகத்தில் டச்சு, ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், கிரேக்கம், லத்தீன், அரபு ஆகிய மொழிகளுடன் கணிதவியல், பௌதிகவில், இரசாயனவியல், உயிரியல், வரலாறு, புவியியல் என்று பல்துறை சார்ந்து பயின்ற இந்த அறிஞன், அறிவுத் தாகங்கொண்டு பயிலத் தேர்ந்தெடுத்த மொழி சமஸ்கிருதம்.

இந்திய அரசின் புலமைப்பரிசில் பெற்று, சென்னைப் பல்கலைக் கழகத்தில் அறிஞர் ரி. எம். பி. மஹாதேவன் வழிப்படுத்தலில் ‘அத்வைதமும் நவபிளேட்டோனிய வாதமும்: ஒப்பீட்டு மெய்யியலில் ஒரு விமர்சன ஆய்வு’ என்ற தலைப்பில் ஆராய்ச்சி மேற்கொண்டு கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார்.

மயிலாப்பூரில் சமஸ்கிருத இலக்கண பிதாமகனான பாணினியின் இலக்கண நூலை தமிழ் மொழிமூலமாக ஒரு சமஸ்கிருத பண்டிதரிடம் பயின்றவர், நவீன மொழியியலில் நுழைந்து, ‘பாணினி இந்தியாவின் யூக்லிட்’ என்று பிரகடனம் செய்தார். நவீன கணிதவியல் தர்க்கத்தின் நுட்பங்களை கி. மு. 6ஆம் நூற்றாண்டிலேயே தனது சமஸ்கிருத இலக்கண நூலான ‘அஸ்தத்யாயி’லேயே பிரயோகப்படுத்தியுள்ளார் என்று நிறுவும் ப்ரிட்ஸின் ஆய்வுக் கட்டுரைகள், அவரது மொழியியல் ஆழத்தை வெளிப்படுத்துவன.

வாரணாசியில் ‘நாவ்ய நியாய’ தர்க்கத்தையும் துறைபோகக் கற்று, தன் வாழ்நாள் முழுவதும் வேத பாரம்பரியம் பாதுகாக்கப்படவேண்டும் என்று பாடுபட்ட பெருமகன்.

இமயமலையின் இரு புறங்களிலும் நெடும்பயணம் மேற்கொண்டு, இந்தியாவினதும் சீனாவினதும் அறிவார்ந்த வாழிகாட்டலில், நாகரீகம் ஆசியாவை நோக்கி மீளும் என்று தீர்க்கதரிசனம் கூறியிருக்கிறார்.

*`Discovering the Vedas'* என்ற ப்ரிட்ஸின் நூல், வேதத்தின் பெரும் சிக்கல்களை அவிழ்த்திருக்கும் அபூர்வமான நூல் என்கிறார் ரொமிலா தாப்பர்.

அம்ஸ்ரர்டாம் பல்கலைக்கழகம், லண்டன் பல்கலைக்கழகத்தின் கீழைத்தேய ஆபிரிக்க கற்கைக் கல்லூரி, கலிபோர்ணியா பல்கலைக்கழகம் ஆகியவற்றில் மெய்யியல், சமஸ்கிருத பேராசிரியராக பணியாற்றிய ப்ரிட்ஸ் எழுதிய *The Vedic Ritual of the Fire Altar , Universals: Studies in Indian logic, Linguistics and Rules without meaning* ஆகிய நூல்கள் இந்தியவியலில் அவருக்கு நிரந்தர ஸ்தானத்தை தேடிக்கொடுத்தன.

“வேதங்கள் எழுத்து வடிவில், செயற்பாட்டினை விளக்கப்படுத்தக்கூடியன அல்ல; சடங்கு முறைகளைப் பின்பற்றுபவருக்கு செயல், செயல் மட்டுமே முதன்மையானது. அந்தச் செயல் என்பது பாராயணமும் மந்திரம் ஓதுதலும் மட்டும்தான்’’ என்று திட்டவட்டமாகக் கருதும் ப்ரிட்ஸ் இருக்கு, யசுர், சாம, அதர்வ வேதங்களை துறைபோகக் கற்றவர்.

கேரளத்தில் 10 ஆயிரத்து 800 செங்கற்களால், பறவை வடிவில் அமைக்கப்பட்ட பீடத்தில், தலைசிறந்த நம்பூதிரி அறிஞர்களைக்கொண்டு நிகழ்த்தப்பட்ட ‘அதிரௌத்ரம்’ என்ற மாபெரும் அபூர்வ மந்திரச் சடங்கினை 12 நாள்கள் நிகழ்த்தி, அதனைப் பதிவுசெய்தார்.. ஹாவர்ட் பல்கலைக்கழகத்தின் மானிடவியல் விவரணப்பட தயாரிப்பாளரான றொபர்ட் கார்ட்னர் இந்த மந்திரச் சடங்கினை *Altar of Fire* என்ற தலைப்பில் விவரணப் படமாக்கியிருக்கிறார். ‘அக்னி’ என்ற பெயரில் இரு தொகுதி நூலாகவும் ப்ரிட்ஸ் இதனை வெளியிட்டிருக்கிறார்.

வாய்மொழி மரபு, வேதகால மக்கள் குறித்த அகழ்வாய்வு, வேதகால மக்களின் மொழி ஆகியவற்றிலிருந்து பிரிட்ஸ் தனது தகவல்களைத் துருவித் தேடி எடுக்கிறார். வேதங்கள் குறித்து அவர் உதிர்க்கும் கருத்துக்கள் அபூர்வமானவை; அவரது சொந்த, ஆழ்ந்த மதிப்பீட்டிலிருந்து உருப்பெற்றவை. ‘வேதங்களிலிருந்து இன்று கற்றுக்கொள்ள என்ன இருக்கிறது’ என்பது அவரது ஆய்வின் முக்கிய மையமாகும். வேதங்களைத் தொகுத்தவர்களின் தத்துவஞானம் குறித்து பிரிட்ஸ் பிரமித்துப்போகிறார்.

வேதத்தைக் கண்டறியும் பயணம், முடிவுகாண முடியாத பெரும் பயணம் என்கிறார்.

வேதகாலம் பற்றிய அபாரமான அறிவுடன் தனது கூர்மையான, தனித்துவமான நோக்கில், மிகமிக நுட்பமான தகவல்களின் பலத்துடன், வேதகாலத்தின்மீது கவிந்திருக்கும் கருமேகங்களை தனது ஞானத்தின் பிரகாசத்தில் கலைத்துப்போடும் ஞானியாகிறார் பிரிட்ஸ் ஸ்டால்.

பிரிட்ஸ் ஸ்டால் இறுதியாக எழுதி வெளியிட்ட *Discovering the Vedsas - Origins, Mantras, Rituals, Insights* என்ற பென்குயின் வெளியீடு *(2008)* புலமையாளர்களுக்கு மட்டுமல்ல, சாமானியர்களுக்கும் பயன்படும் மிகச் சிறந்த நூலாகும்.

தமிழ் புலமை உலகில் பிரிட்ஸ் ஸ்டால் அத்துணை கவனம் பெறாதவராக இருந்தது கவலைக்குரியது. ■

# 13வது

## ஆண்டில் காலடி எடுத்து வைப்பதை முன்னிட்டு
## தீபம் தொலைக்காட்சி வழங்கும்
## வீசேட சலுகை

ஒரு வருட சந்தா புதுப்பித்தல்

# £35 மட்டுமே!

**Tel: 020 8814 6565**
**www.deepamtv.tv**

உலகத் தமிழருக்கு ஒரு தொலைக்காட்சி




Niru BRAND
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk